
இலக்கியச் சிறு கதைகள்



முதற் பகுதி

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.

கழக வெளியீடு—௪௧௭

இலக்கியச் சிறு கதைகள்

முதற் பகுதி

ஆசிரியர்கள் :

பண்டித-வித்துவான்-மி. பொன். இராமநாதஞ் செட்டியார்

சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்

திருநெல்வேலி : : சென்னை.

முகவுரை

மாணவர்களும் பொதுமக்களும் உயர்ந்த கருத்துகளையும் கதைவழியாகச் சொன்னால் எளிதாகப் பற்றிக்கொள்வார்கள். இவ்வுண்மை யுணர்ந்தே ஆங்கில முதலிய பிறமொழியாளர்கள், ஏராளமான கதை நூல்களை வெளிப்படுத்தித் தங்கள் தங்கள் மொழிகளைப் பரப்பி வருகின்றார்கள்.

நமது அருமைத் தாய்மொழியாகிய அமிழ்தினும் இனிய தமிழ் மொழிக்கண் சிறு சிறு கதைகள் மிகவும் குறைவு. இக் குறைவை யொழித்து நிறைவு செய்வதன் பொருட்டுச் செந்தமிழ் மொழிக்குப் பலவகையாலும ஆக்கந்தேடி இடையறாது உழைத்து வரும "திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார்" அப்பணியினை எமக்கு அளித்துள்ளார்கள்.

யாங்களும் பழைய நல்லிசைப் புலவர்கள் பாடியருளிய அரும்பெரும் இலக்கியங்களிலிருந்து இனிமையும் சுவையும் பயக்கும் செய்யுள்களிலுள்ள கருத்துக்களைக் கதைகளாக அமைத்து எளிய இனிய செந்தமிழ் நடையில் எழுதியிருக்கின்றோம். அவ்வக் கதைகளுக்குரிய செய்யுட்களையும் கீழே வரைந்திருக்கின்றோம். இம்முறையில் பல கதை நூல்கள் தொடர்ச்சியாக வெளிவரும். அவற்றுள் இம் முதற் புத்தகத்தை ஆசிரியர்களும் பொதுமக்களும் வாங்கிக் கற்பித்தும் கற்றும் பயன்எய்தி எங்களை ஊக்கப்படுத்த வேண்டுகின்றோம்.

பொருளடக்கம்

இலக்கியச் சிறு கதைகள்

பகுதி க.

க. முழுத்திங்கள் தாங்கிய முதல்வன்

ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் சிறுவர்களுக்குப் பலவிதமான கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். ஒருநாள் அவர் இறைவன் பிறைத் திங்களைத் தமது செஞ்சடையிலே தாங்கியுள்ளமையையும், அதன் காரணத்தையும் கூறினார். அப்போது ஒரு சிறுவன் ஆசிரியரைப் பார்த்து, "இறைவன் பிறைத்திங்களைமட்டுமா தாங்கிக்கொண்டிருக்கின்றான்? முழுத்திங்களைத் தாங்குவது இல்லையா? ஏன் முழுத்திங்களைத் தாங்குவதில்லை? தாங்குவதற்கு அவர்க்கு வன்மையில்லையா? அல்லது முழுத்திங்கள் அவருக்கு அகப்படவில்லையா?" என்று இத்தகைய கேள்விகள் பலவற்றைக் கேட்டான்.

ஆசிரியர் நல்ல அறிஞர். அவர் மாணவனுடைய அறிவுக் கூர்மையைக் கண்டு வியந்தார். அவன் அறிவு குன்றும்படியாக விடையளிக்க அவருக்கு விருப்பமில்லை. எனவே சிறிது எண்ணினார்.

"இறைவன் பிறைத்திங்களைத் தவிர முழுத்திங்களையும் தாங்குகின்றான். அஃது எங்கே என்றால், தொண்டைநாட்டிலே திருவண்ணாமலை என்

றொரு மலை இருக்கின்றது. அம்மலை இறைவ னுடைய உருவமேயாகும். அது வானளாவ ஓங்கி யது. ஞாயிறும் திங்களுங்கூட அதன் முடியிலே தவழ்ந்துதான் செல்லவேண்டும். பௌர்ணமி நாளிலே முழுத்திங்கள் அம்மலையின் முடியிலே தவழ்ந்து செல்லுகின்றது. அப்பொழுது இறை வன் முழுத்திங்களையுந்தான் தாங்குகின்றான்'' என்று விடையளித்தார். சிறுவன் தான் விரும்பிய படி இறைவன் முழுத்திங்களையும் தாங்குகின்றான் என்று அறிந்து மகிழ்ச்சி யடைந்தான்.

ஆம்குறை மதியே தாங்கிஎன் றுலகம்
அறைகுறை அறநிறை மதியும்
தாங்கிய முடியோ டோங்கிய சோண
சைலனே கைலைநா யகனே.

(அ-ரை.) குறை ஆம் மதி - பிறைத்திங்கள். தாங்கி - தாங்கு வோன். அறை - சொல்லுகின்ற. சோணசைலன்- சிவந்த நெருப்புமலை வடிவாக விளங்குபவன்.

---

௨. கார்முகிலும் கரியுரியும்

சிவப்பிரகாச அடிகள் என்னும் பெரியார் திருவண்ணாமலை என்னும் திருத்தலத்திற்குச் சென் றார். அங்குக் கார்த்திகைத் திங்கள்தோறும் திரு விழா நடைபெறுவது வழக்கம். அப்போது கார் காலமாதலின் வானளாவ ஓங்கியுள்ள அம்மலை யின் மேற்பகுதி முழுவதையும் கரிய முகில்கள் மறைத்துச் சென்றன. சிவப்பிரகாச அடிகளும் அவருடன் சென்றிருந்தோரும் அம்மலையை வலஞ்

செய்துகொண்டு சென்றனர். அப்போது இறைவன் வடிவமாக விளங்கும் மலையைக் கார்முகில்கள் கவிந்து செல்வதற்கு எதனை ஒப்பிடலாம் என்று அடிகளின் உள்ளம் ஆராய்ச்சியில் ஈடுபட்டது.

ஒரு காலத்திலே இறைவன் ஒரு யானையைக் கொன்று அதன் தோலை மேலாடையாகப் போர்த்திக்கொண்டருளினான். இறைவனுடைய அப்போர்வை அவனுடைய உடம்பின் மேற்பகுதியை மூடிக்கொண்டிருந்த தன்மைக்கு முகிலால் சூழப்பட்ட இம்மலையை உவமை கூறலாமென்று முடிவு செய்தார். அக்கருத்தினைத் தம்முடன் வந்தவர்களுக்கும் புலப்படுத்தினார். இதைக் கேட்ட அவ்வறிஞர்களும் அடிகளின் ஒப்புமை கூறும் ஆற்றலைக் கண்டு உள்ளம் களித்தனர்.

மற்றவர்கட்கு எளிதில் தோன்றாத இவ்வுவமைகள் அடிகட்கு எளிதில் தோன்றியது அவருடைய அறிவின் மாட்சியை விளக்குகிறதன்றோ!

கருங்கடம் உமிழும் ஈர்ங்கவுள் பனைக்கைக்
கரிஉரி கஞ்சுகம் கடுப்பத்
தரங்கம்உண் டெழுகார் முகில்பயில் சோண
சைலனே கைலைநா யகனே.

(அ-ரை.) கருங்கடம்-கரிய மதம். ஈர்ங் கவுள்-மதத்தால் நனைந்த கன்னம். பனைகை - பனந்துண்டு போன்ற துதிக்கை. கரி உரி கஞ்சுகம் கடுப்ப - யானையின்தோல் கருஞ்சட்டையை ஒக்க. தரங்கம்-கடல். கார்முகில்-கருமேகம். பயில் - நெருங்கிப் படிந்துள்ள.

௯. சிங்கத்தின் ஏமாற்றம்

ஒரு பெரிய மலையில் ஒரு பெரிய குகை இருந்தது. அதில் ஒரு சிங்கம் வசித்து வந்தது. அந்தச் சிங்கம் ஒரு சோம்பேறி. அது தனக்கு வேண்டிய இரையைத் தேடுவதற்குக்கூட வெளியே செல்ல மாட்டாது. ஏதேனும் விலங்குகள் தப்பித் தவறி அந்தக் குகைப்பக்கம் வந்தால் அவற்றைப் பிடித்து அடித்துக் கொன்று தின்று காலம் கழித்து வந்தது.

அக்குகையில் சிங்கம் இருப்பதை உணராத விலங்குகள் அது வறிதாயிருப்பதாக எண்ணி அங்குத் தங்கலாம்என்னும் எண்ணத்துடன் உள்ளே சென்று அச்சிங்கத்திற்கு இரையாவதும் உண்டு. ஒரு நாள் அச்சிங்கத்திற்குப் பசி மிகுதியாய் விட்டது. அதனல் "எவையேனும் விலங்குகள் வரும்; கொன்று தின்போம்" என்னும் எண்ணத்துடன் விலங்குகளின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது சிங்கம். அப்போது வானில்சென்ற ஒரு கரிய பெரிய முகில் அக்குகையின் வாயில் வழியாகச் சென்றது. அதனைக் கண்ட சிங்கம் யானைதான் வந்துவிட்டதென்னும் எண்ணத்துடன் எழுந்து மிக விரைவாக அதன்மீது பாயச் சென்றது. அப்பொழுதுதான் அது முகில் என்னும் உண்மை சிங்கத்திற்குத் தெரிந்தது. பிறகு அது தன்னுடைய மடமையை எண்ணி நாணிற்று.

கரிமருங்(கு) அணைந்த(து) எனமுழை வாயில்
 கார்வர விரைந்(து)எழுந் (து)உகள்கே
சரிமறைந்(து) இருந்து நாணுறும் சோண
 சைலனே கைலைநா யகனே.

(அ.ரை.) கரி - யானை. மருங்கு - குகையின் பக்கம். முழை - குகை. கார்-மேகம். உகள் கேசரி - பாய்ந்த சிங்கம்.

ச. கடல் கடையும் காட்சி

முன்னொரு கதையில் கூறப்பட்ட சிவப்பிர காச அடிகள் அக்கதையில் கூறிய செய்தியைக் கேட்டு உடனிருந்த அறிஞர்கள் உள்ளங் களித்த துடன் அமையவில்லை. அப்போது அங்கு எண்ணற்ற மக்கள் கடல்போல இரைந்து இறை வன் பெயர்களைக் கூறிக்கொண்டு ஆரவாரத்துடன் அம்மலையை வலம் வருதலைக் கண்டு அடிகளைப்பார்த்து, "பெரியீர்! மக்களின் பெருங் கூட்டம் மலையின் நான்கு புக்கங்களிலும் இவ்வாறு ஆரவாரத்துடன் செல்வதை எதற்கு ஒப்பிடலாம் என்பதைத் திருவாய் மலர்ந்தருளுங் கள்'' என்று விண்ணப்பித்துக்கொண்டனர்.

அடிகள் உடனே, "நடுவில் மலைவிளங்க நான்கு பக்கங்களிலும் மக்கள் ஆரவாரத்துடன் செல்லும் காட்சியைப் பாற்கடலில் மந்தரமலையா கிய மத்தைபிட்டுத் தேவர்களும் அசுரர்களும் அத னைச் சுற்றி நின்று ஆரவாரத்துடன் இழுத்துக் கடைந்த காட்சிக்கு ஒப்பிடலாம்'' என்று உரைத் தருளினர். இதுவும் முற்றிலும் பொருந்தும்படி

அருமையாக அமைந்திருத்தலை அறிந்த அறிஞர்கள் அடிகளின் பெருமையைப் பெரிதும் கொண்டாடினர்.

வலம்புரி மனிதர் கடலென ஒலித்து
வளைவுற நடுவண்மந் தரம்போல்
தலம்புரி தவத்தின் நின்றெளிர் சோண
சைலனே கைலைநா யகனே.

(அ-ரை.) வலம்புரி - வலம் செய்கின்ற. வளைவு உற - சூழ. நடுவண் - நடுவே. தலம் புரி தவத்தின் - உலகத்தார் செய்த தவத்தின் காரணமாக. ஒளிர் - விளங்கும்.

ரு. மயிலும் முகிலும்

ஒரு சிறுவன் தன்னுடைய தந்தையைப் பார்த்து, "மயில்கள் முகிலைக் கண்டு ஏன் அகவுதலும் ஆடுதலும் செய்கின்றன?" என்று கேட்டான். அவனுடைய தந்தைக்கும் மயில்கள் முகிலைக் கண்டு ஆடுவதன் உண்மைக் காரணம் இன்னதென்று தெரியாது. ஆயினும் ஒருவாறு பதில் கூற எண்ணினர். அவர் சிறுவனைப் பார்த்து, "முகில்கள் இந்திரனுடைய ஊர்தியாகும். இந்திரன் முருகக்கடவுளுக்கு மாமனாவன். எதனாலெனின் தன்னுடைய மகளாகிய தேவயானையை முருகக்கடவுளுக்குத் திருமணஞ் செய்து கொடுத்திருக்கின்றான். அதனால் முருகக்கடவுளின் ஊர்தியாகிய மயிலுக்கும், இந்திரன் ஊர்தியாகிய முகிலுக்கும் உறவு உண்டாய் விட்டது. இந்த உறவினால் முகிலைக் காணும் மயில்

கள் களித்துத் தோகை விரித்து ஆடுதலும் அகவுதலும் செய்கின்றன" என்று கூறினர்.

இதனைக் கேட்ட சிறுவன், "இரண்டு செல்வர்களுக்கு உறவு ஏற்பட்டால் அவர்களுடைய ஏவலாட்களும் ஒருவருக்கொருவர் உறவு கொண்டாடுகின்றார்களே! அதுபோலவா இவ்வுறவும்?" என்று கேட்டான். ஆம் என்று விடையளித்தார் தந்தையும்.

என்னை ஊர்ந்தருள் சுடர்வடி இலையவேல் பெருமான் ·
தன்னை நன்மரு கெனப்படைத் தவன்தன(து) ஊர்தி
அன்ன தாம்எனும் கேண்மையான் அளிமுகில் குலத்தைக்
கன்னி மாமயில் காண்தொறும் களிசிறந் தகவும்.

(அ-ரை.) என்னை என்றது—மயிலை. ஊர்தல்-ஏறிச் செலுத்தல். சுடர்வடி இலையவேல் பெருமான்-ஒளியும் கூர்மையும் பொருந்திய இலைவடிவமான வேற்படை தாங்கிய முருகப்பெருமான். மருகு-மருமகன். முருகனை மருமகனாகப் படைத்தவன்; இந்திரன். அவனது ஊர்தியாவது: முகில்; ஊர்தி - வாகனம். அன்னது ஊர்தியாமெனும் கேண்மையால் எனக் கூட்டுக; அன்னது - அது; கேண்மை - உறவு. முகில் குலம் - மேகக் கூட்டம். கன்னி - இளைய. மா - சிறந்த. களி - களிப்பு.

---

௬. கொலைக் கொடுமை

ஊனூர் என்னும் ஓரூரிலே வாழ்ந்த மக்கள் புலாலுண்டலிலே தீரர்களாகத் திகழ்ந்தனர். ஆடு, மாடு, பன்றி, கோழி, மீன், வாத்து முதலிய எல்லா உயிர்களையும் சிறிதும் வேறுபாடு கருதாமல்

கொன்று தின்று மகிழ்ந்தனர். அவ்வூருக்கு ஒருநாள் ஒரு சைவப் புலவர் வந்தார். அவர் அவ்வூர் மக்களின் அறியாமையைக் கண்டு பெரிதும் வருந்தினர்.

அவர் அம்மக்களைப் பார்த்து, "அந்தோ இவ்வாறு எண்ணிறந்த உயிர்களைக் கொலை புரிந்து உண்கின்றீர்களே! இது தகுதியாகுமா? ஒருயிரைக் கொன்று அதன் ஊனை உண்டல் பெருந்தீவினையாயிற்றே! ஊனுண்டல் தீதென்று அறிஞர்கள் தடுத்திருப்பதை நீங்கள் அறியமாட்டீர்களா?" என்று வினவினர் அப்போது, ஊனுண்டு சுவை கண்ட ஒருவன் அச்சைவர்முன் வந்து, "ஊனுண்டல் தீய காரியந்தான். ஆயினும் புண்ணிய நீராடல் கடவுளைப் போற்றுதல் முதலிய அறச் செயல்களால் கொலையின் தீவினையைப் போக்கிக் கொள்ளலாம்" என்றான். அவன் கூறியதைக் கேட்ட சைவப்புலவர், "கங்கையில் நீராடினாலும், கடவுளை வழிபட்டாலும், கணக்கின்றிச் செல்வத்தை வாரி வள்ளல்போல் வழங்கி அறஞ் செய்தாலும், ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் ஞானநூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தாலும் ஊனுண்பவனைத் தீவினை விடமாட்டாது. அவன் நரகத்தை அடைவது திண்ணம்." என்று கூறினர். இவர் கூறியதைக் கேட்ட புலால் உண்போன், "கொன்றால் பாவம் தின்றால் தீரும் என்று கூறுகின்றார்களே! ஆகையால் கொன்ற பாவம் அதனைத் தின்பதனால் தீர்ந்து போகாதோ?" என்று கேட்டான். அதற்குச் சைவர், "நீ அந்தப் பழமொழிக்குத் தவருகப்

பொருள் செய்துக்கொண்டாய். கொன்ற பாவம் கொல்லப்பட்ட உயிர் மனிதனாகப் பிறந்து தன்னைக் கொன்று தின்றவனைத் தானும் கொன்று தின்ற பிறகுதான் தீரும்'' என்று அப்பழமொழியின் பொருளை விளக்கினர்.

சைவப் புலவரின் உரையைக் கேட்டு அவரிடம் பேசியவனும், அவ்வூர் மக்களும் அஞ்சினர். அது முதற்கொண்டு அவர்களும் புலால் உண்டலை ஒழித்தனர். சைவர் தமதுரை பயன்பட்டமை கண்டு பெரிதும் மகிழ்வெய்தினர்.

கங்கையில் படிந்திட்டாலும், கடவுளைப் பூசித்தாலும்,
மங்குல்போல் கோடி தானம் வள்ளலாய் வழங்கினாலும்,
சங்கையில்லாத ஞான சாஸ்திரம் உணர்ந்திட்டாலும்
பொங்குறும் புலால்புசிப்போன் போய் நரகடைவன் அன்றே.

(அ-ரை.) மங்குல்—மேகம். வள்ளல்—அளவில்லாதுகொடுப்போன். வழங்குதல்—கொடுத்தல். சங்கை—ஐயம். பொங்குறும் புலால்—மிக்க இறைச்சி (மாமிசம்.)

எ. செல்வத்தின் பெருமை

மன்னன் ஒருவனுடைய பேரவைக்கு இருவர் ஒன்றாகச் சேர்ந்து சென்றனர்: ஒருவன் பெரும் புலவன். மற்றவன் பெருஞ்செல்வன். இருவரையும் அரசன் முன்னரே நன்கறிவான். புலவன் இலக்கண இலக்கிய நூல்களையும், அறிவு நூல்களையும், மற்றுமுள்ள தருக்கம் முதலிய எல்லா நூல்களையும் நன்கு கற்று அவற்றில் எல்லாம் பெரும்புகழ்

பெற்றவன். செல்வனே நிலபுலங்களையும், பொன், மணி முதலிய பலவிதப் பொருட் குவியல்களையும் ஏராளமாகப் படைத்தவன். ஆனால் அவனிடம் அறிவு என்பது மருந்திற்குக்கூட அகப்படாது. கல்விமணம் உள்ள ஊரில்கூட அவன் குடியிருந் தறியாதவன்.

இத்தகைய இயல்பு வாய்ந்த அவர்கள் இருவரும் அரசன் அவைக்களத்தை அடைந்ததும் மன்னன் செல்வனை வரவேற்று மிகவும் போற்றித் தகுதியான ஓரிருக்கையில் இருக்கச் செய்தான். புலவனையோ திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. புலவனுக்குச் சினம் பொங்கி வழிந்தது. அதனால் அவன் அரசவையை விட்டு வெளியே வந்து, "அரசனுடைய அவைக்குச் செல்வோனுக்குச் செல்வம் மிகுதியாக இருத்தல் வேண்டும். பல்லக்கும் அதனைத் தூக்குவோரும் வேண்டும். வணங்கிய கையினை யுடையராய் ஏவலர் பலர் எப்பொழுதும் அவனைச் சூழ்ந்திருத்தல் வேண்டும். ஆடை அணிகளால் தன்னை அழகு படுத்திக் கொண்டிருத்தல் வேண்டும். அரசனுக்குக் கொடுப்பதற்குச் சிறந்த காணிக்கைப் பொருள்களைக் கொண்டு செல்லுதல் வேண்டும். இவைகளெல்லாம் இல்லாதவன் அரசவைக்குச் செல்வது தகாது" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

உலகம் பொருளுடையவனை மாத்திரம் போற்றிச் சிறப்புச்செய்தலை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம் அன்றோ!

சிவிகைமுன் ஊர்தி வேண்டும்; செழும்பொருட் செலவு வேண்டும்.
குவிகைஏ வலரும் வேண்டும்; கோலம்ஆர்ந் திருக்க வேண்டும்;
கவிகைதாங் குநரும் வேண்டும்; கையுறை சிறப்ப வேண்டும்;
அவிகையில் விளக்கம் வேண்டும் அரசவை குறுகு வோர்க்கே.

(அ-ரை.) சிவிகைமுன்—பல்லக்கு முதலான. ஊர்தி—வாகனம். குவிகை ஏவலர்—கைகூப்பி வணங்கும் வேலையாட்கள். கோலம் ஆர்ந்து—நிறைந்த அழகு செய்துகொண்டு. கவிகை—குடை. கையுறை—காணிக்கை. அவிகை இல்—கெடாத. விளக்கம்—பெருமை.

கோதறு கல்வி சால்ஊர்க் குடிஇருந் தறியானேனும்
ஓதறும் செல்வம் மிக்கோன் ஒருவனே சிறந்தோ னவான்;
காதலின் வேதம் முன்ஆம் கலைகள்கற் றுணர்ந்தா னேனும்
தீதமை மிடியன் ஆயின் சிறந்திடான் வேத்த வைக்கே.

(அ-ரை.) கோதுஅறு—குற்றமற்ற. சால்—நிறைந்த. மிடியன்—வறியவன். வேத்தவை—அரசவை.

அ. முற்பிறப்பின் தீவினை

ஒருவன் பிறந்ததுமுதல் கடுமையான நோய்களால் பீடிக்கப்பட்டுப் பெருந்தொல்லைகளை நுகர்ந்து கொண்டிருந்தான். எத்தகைய மருந்துகளை உண்டாலும் அவனுடைய நோய் தீருவதில்லை. அந்நோயோடு வறுமை நோயும் அவனைப் பிடித்து வருத்தி வந்தது. அவன் எக்காலமும் கொடுமையான வயிற்றுவலியாலும், இருமலாலும் பெருந் துன்புற்று வந்தான். அவனைக் கண்ட சிலர், “ அட பாவி! முற்பிறப்பில் ஏதேனும் நல்வினை யொன்றைச் செய்திருக்கலாகாதா! செய்தவைகளை எல்

லாம் தீவினைகளாகவேயா செய்தாய்!" என்று கேட்டு இரங்கினர். அதற்கு அந்நோயாளி "நான், தீவினையாளன் என்கின்றீர்களே! முற்பிறப்பில் யான் தீவினையேதான் புரிந்தேன் என்று எவ்வாறு அறிந்து கூறுகின்றீர்கள்? நல்வினைகளையும் நான் ஏன் செய்திருக்கக் கூடாது" என்று கேட்டான்.

இவன் கூறியதைக் கேட்ட அவர்கள் நகைத்துச், "சென்ற பிறப்பில் ஒருவன் தான் செய்த நன்மை தீமைகளை இந்தப் பிறப்பில் அடையும் நன்மை தீமைகளாலும், இனிவரும் பிறப்பில் அடையப் போகின்ற நன்மை தீமைகளை இப்பிறவியில் செய்கின்ற நல்வினை தீவினைகளாலும் நன்கு அறிந்து கொள்ளலாம் என்பதை நீ அறியாயோ? ஒவ்வொருவரும் இவ்வாறுதான் அடைகின்றனர் என்பது பெரியோர்களின் நூல் முறைக்கும் உடன்பாடாகும்" என்று கூறினர்கள்.

இதன் பிறகுதான் அந்நோயாளி தான் நுகர்ந்துவரும் துன்பத்திற்குத் தன் முற்பிறவியின் தீவினையே காரணமென்று தெளிந்தான்.

இறந்த பிறப்பில்தாம் செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக;—பிறந்திருந்து
செய்யும் வினையால் அறிக; இனிப்பிறந்(து)
எய்தும் வினையின் பயன்.

கூ. கல்லாதான் கற்ற கவி

ஔவைப் பிராட்டியார் ஓரரசன்மீது சில செய்யுட்களைச் செய்துகொண்டு சென்றார். அப்போது அவர் ஒரு காட்டின் வழியாகச் செல்லும்படி நேர்ந்தது. அவ்வாறு அவர் செல்லும் வழியில் சில மயில்கள் அழகாகத் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தன. அம்மயில்களின் ஆட்டத்தைப் பார்த்து அங்குத் திரிந்துகொண்டிருந்த வான்கோழிகளும் தம்முடைய அழகற்ற சிறகுகளை விரித்து அம்மயில்களைப்போல் ஆடுவதற்கு முயன்றன. இதனை ஔவையார் பார்த்துக்கொண்டே சென்றார்.

அரசனுடைய அவைக்களத்தை அடைந்ததும் அவர் தம்முடைய கவியை அரசனிடம் பாடி அரங்கேற்றினார். அப்பொழுது வேறு பல புலவர்களும் செய்யுள் செய்துகொண்டு வந்து அரங்கேற்றினார்கள். அக்காலையில் அரசனிடம் பரிசு பெறுதல் வேண்டுமென்னும் அவாவினால் சிறிதளவே கல்வி கற்ற ஒருவன் அரைகுறையாகவும் பல தவறுகளுடனும் ஒரு செய்யுளை எழுதிக்கொண்டு வந்து அவனும் அந்தப் பாட்டைப் பாடி அரங்கேற்றினான். அவனுடைய பாட்டின் போக்கை கண்ட அரசன் ஔவைப் பிராட்டியாரைப் பார்த்து, "அம்மையே! இப்பாட்டு எவ்வாறிருக்கின்றது?" என்று கேட்டான்.

அரசன் கேட்டதைச் செவியேற்ற ஔவையார் தாம் வழியில் கண்ட காட்சியை நினைவு படுத்

திக்கொண்டு அவனை நோக்கி, “அரசே! யான் வந்த காட்டு வழியில் சில மயில்கள் அழகாக ஆடிக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்த சில வான் கோழிகள், தாமும் அவ்வாறே ஆடுதற்கு முயன்றன. அச்செயல் போன்றுதான் இருக்கின்றது இப்பாட்டைப் பாடினவன் செயலும்” என்று கூறினர். இவர் இவ்வாறு கூறியதைக் கேட்டு அரசனும் அவைக்களத்திலிருந்த அறிஞர்களும் நகைத்தனர். அந்தச் செய்யுளைப் பாடிய அறிவிலியோ நாணித் தலைகவிழ்ந்து நின்றான்.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகை விரித் தாடினல் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

(அ-ரை) கானம்—காடு.

கo. நாவலூர்ப் புலவர்களும் நல்லிசைப் புலவர்களும்.

சைவ சமயாசாரியர்கள் நால்வரில் ஒருவராகிய சுந்தர மூர்த்தி அடிகள் தம்பிரான்தோழன் என்று மிகவும் சீர்த்தி பெற்றவர். இவர் நாவலூர்ப் புலவரெனவும் வழங்கப் பெறுவர். இவர் திருப்புகலூர் என்னும் ஊரிலே தங்கி இறைவனைத் தேவாரப் பாக்களாலே புகழ்ந்து பாடிக்கொண்டிருந்தார்.

அந்நாளிலே திருப்புகலூரிலே ஒரு பெருஞ் செல்வர் இருந்தார். அவர் பெருஞ் செல்வராயி

ருந்தும் ஈகைக் குணம் அவரிடம் ஓர் எள்ளளவும் இல்லாதிருந்தது. அச்செல்வரின் இயல்பறியாத சில புலவர்கள் அவர்மீது அருமையான பாடல்கள் செய்துகொண்டு வந்து புகழ்ந்து பாடிப் பொருள் கேட்டனர். அச்செல்வரோ பாட்டைக் கேட்டார். கேட்டதும் “ஆ, ஆ! நன்றாக இருக்கின்றது” என்று தலையையும் ஆட்டினார். ஆனால் அப்புலவர்கட்குப் பொருள் கொடுக்க மட்டும் அச்செல்வர் விரும்ப இல்லை. ஆதலால் அவர் புலவர்களை நோக்கி, “நான் இப்பொழுது பொருள் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கின்றேன். இன்னொரு முறை வாருங்கள்; அப்பொழுது ஏதேனும் தருகிறேன்” என்றார். புலவர்கள் வருத்தத்துடன் திரும்பிச் சென்றனர். செல்லும் வழியில் சுந்தரமூர்த்தி அடிகள் எதிர்ப்பட்டார். அவர் புலவர்கள் வருத்தத்துடன் இருப்பதை உணர்ந்தார். அவர்களுடைய வருத்தத்திற்குக் காரணம் ஏதென வினவினார். புலவர்கள் நிகழ்ந்ததைக் கூறினர். அடிகள் புலவர்களைப் பார்த்து, “புலவீர்காள் நாம் எப்பொழுதும் பலபடியாகப் புகழ்ந்து பாடித் தற்புகழ்ச்சியாக இனிய உரைகளையே மொழிந்தாலும் நம்மைப் போன்ற அடியார்களுக்கு ஏதும் கொடாத பொய்யர்களை மாத்திரம் பாடாதீர்கள்! பாட விரும்பினால் என்னைப்போன்று இறைவனையே பாடுங்கள்! அவ்வாறு பாடுவீர்களாயின் இப்பிறப்பில் நமக்குத் தேவையான உண்டி, உடை, உறுபுகழ் முதலியன கிடைப்பதுடன் நமக்கு வரும் இடையூறுகளும் அவ்விறைவன் அரு

ளால் நீங்கும். மறுபிறப்பில் சிவலோக ஆட்சி பெறுவதிலும் ஐயமின்று" என்று அறிவுச்சுடர் கொளுத்தியருளினர்.

புலவர்களும் அடிகளாரின் அறவுரையைக் கேட்டு நல்லறிவு பெற்றுச் சென்றனர்.

தம்மையே புகழ்ந்(து) இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேஎந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்.
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயுற வில்லையே.

(அ-ரை.) இச்சை—விரும்புமாறு. தொண்டர் சார்வினும் எனக் கூட்டுக! சார்வினும்—அடைந்தாலும். புகலூர் எந்தை—புகலூரின்கண் உள்ள எம்முடைய தந்தையாகிய இறைவன். இம்மை—இப்பிறப்பு. ஏத்தலாம்இடர்—மிக்க துன்பம்; ஏத்தல் துதித்தலுமாம். அம்மை—மறுபிறப்பு.

கக. திங்களும் கொண்டலும்

மணியும் முத்தும் இணைபிரியாத நண்பர்கள். இவர்கள் இருவரும் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். சேர்ந்திருந்தாலும் இக்காலத்துச் சிலபிள்ளைகளைப்போல வீண்பேச்சும், வெறும் பொழுது போக்குமாகக் காலத்தைக் கழிப்பார்களா என்ன? ஒரு கணப்பொழுதையும் அவ்வாறு கழிக்க இருவ

ரும் விரும்பமாட்டார்கள். எப்பொழுதும் சிறந்த நூல்களைக் கற்பதிலும், அறிவை வளர்க்கும் பேச்சுக்களைப் பேசுவதிலும், பயன்தரும் செயல்களைச் செய்வதிலுமே அவர்களுடைய பொழுது கழியா நிற்கும். மேலும் சமயம் வாய்த்துழி யெல்லாம் இயற்கைக் காட்சிகளைக் கண்டு அவற்றில் இன்பந் திளைத்தலும் அவர்களது இயல்பாகும்.

இருவரும் சிறந்த செல்வம் படைத்தவர்களே யாவர். அவர்களுள் மணியினது வீடு இரண்டடுக்குகளையுடைய மாடிவீடாகும். கார்த்திகைத் திங்கள் நிறைமதி நாளன்று, இரவுப்பொழுதில் அவ்வீட்டு மாடியிலுள்ள நிலா முற்றத்தில் இவ்விருவரும் இரு சாய்வு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டு இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது கடல்நீரையுண்டு, கருகருவெனக் கறுத்து, வானத்தில் அடுக்கடுக்காக எழுந்து செல்கின்ற கருமுகில்களுக் கிடையே வெண்கதிர் பரப்பி விளங்கும் திங்கள், தூரத்தில் அம்முகில்கள் செல்லும் விரைவால் அத்திங்கள்தான் செல்வதுபோல் இவர்கட்குக் காட்சியளித்தது. கனத்த கருமுகில்கள் வரும்பொழுது திங்கள் அவற்றிடையே மறைவதும், மெல்லிய படலங்கள் வரும்பொழுது அது திரைக்குள் மறைந்துதோன்றும் உருவம்போல் ஒளிமழுங்கித் தோன்றுவதும், அவை மறைக்காத பொழுது பால்போன்ற தண்ணிய நிலவினைப் பரப்பிப் பசுங்கதிர் விரிப்பதுமாய காட்சிகள், மணிமுத்து இருவரின் கண்ணையும்,கருத்தையும் ஒருங்கே களிப்புறுத்தின. இக்களிப்பில் கருத்தழுந்திய

இருவரும் சிறிதுநேரம் அக்காட்சியையே பார்த் திருந்துவிட்டு எப்பொழுதும் ஒளிவிட்டு விளங்கும் திங்களைவிட முகிலிடையே மறைந்து மறைந்து தோன்றும் திங்களே பேரழகு உடைத்து என் பதை உணர்ந்துதான் வடமொழியாளரும் 'சரற் காலத்துச் சந்திரன்' என்று சிறப்பித்தனர் போலும் என்று சொல்லிக்கொண்டே எழுந்து போயினர்.

இக்காட்சியைக் கண்ட சில நாட்களுக்குப் பிறகு மணியும் முத்தும் தம் பயிர்களைப்பார்த்து வருவதற்காக வயற்பக்கம் சென்றனர். பயிர்க ளெல்லாம் மரகதமணியே தளிர்த்துப் பயிராக வளர்ந்தெழுந்தால் எவ்வாறு இருக்குமோ அவ் வாறு நெருங்கிச் செழித்துக் கருமையும் பசுமையும் கலந்து தோன்றின. அவ்வயல்களில் எப்பொழு தும் வற்றாத நீர் நிறைந்திருந்தமையால் அவற்றில் சங்குகளும் வசித்து வந்தன. அவை அப்பயிருக்கு அடியில் அங்குமிங்குமாகத் திரிந்துகொண் டிருந் ததை நண்பர்கள் இருவரும் கவனித்தனர். அச் சங்குகள் பயிர் நெருக்கமாக இருந்த இடங்களில் மறைந்தும் நெருக்கமில்லாத இடங்களில் புகை மூடியதுபோன்றும், வெள்ளிடங்களில் நன்கு வெளிப்பட்டும் தோன்றின.

இவற்றைக் கூர்ந்து கவனித்த முத்தைப் பார்த்து மணி, "நண்ப! இச்சங்குகள் பயிர்க்கடியில் மறைந்தும், சிறிது தோன்றியும், நன்கு வெளிப் பட்டும் செல்வதைப் பார்த்தாயா? இவை இவ்வாறு

செல்வது எவ்வாறு இருக்கின்றது சொல் பார்க லாம்?" என்றான். முத்துதான அதற்குப் பதில் சொல்லத் தெரியாதவன்! அன்றொருநாள் இரவில் மணியின் மாடிமீது இருந்து கண்ட முழுமதியின் காட்சி அவன் கருத்தைவிட்டு அகலா திருந்தமை யால் உடனே அவன் மணியை நோக்கி, "என் ஆருயிர்நண்ப! இப்பசும்பயிர்கள் பரந்து தோன்று வது வானத்தில் பரந்து செல்லும் கருமுகிற் பட லத்தை ஒத்திருக்கின்றன. இப்பயிர்க் கிடையே நுழைந்து செல்லும் வெள்ளிய சங்குகள் முகிலி டையே செல்லும் முழுமதியை ஒத்திருக்கின்றன" என்று கூறினான். இதைக் கேட்ட மணி முத்தை வியந்து புகழ்ந்தான்.

இவ்வாறு பயன்படக் கழிக்கும் நட்பன்றோ யாவரும் விரும்பத்தகும் நட்பாகும்!

மரகதம் தளிர்த்தென வளர்பைங் கூழ்செறி
தரநிறை கழனியுள் சங்கம் ஊர்வன
பரவைநீர் மேய்ந்தெழும் படலைக் கொண்டலுள்
சரமதி நுழைந்துசெல் காட்சி சாலுமால்.

(அ-ரை.) பைங்கூழ் - பசும்பயிர். செறிதர - நெருங்க. ஊர்வன - தவழ்ந்து செல்லுதல். பரவை-கடல் மேய்ந்து-பருகி படலைக் கொண்டல்-திரண்டமேகம். சரமதி-சரற்காலத் துத் திங்கள் சரற்காலம்-மாரிக்காலம், சாலும்-ஒக்கும்.

கஉ. கெடுவான் கேடு நினைப்பான்

கூனியாகிய ஒரு பெண் காருத்தன் என்னும் பெயருடைய ஒரு வணிகனோடு சேர்ந்து ஊர்ப் பயணம் போனாள். அவ்வணிகனோ கெட்ட மனமும் பேராவாவும் உடையவன். கூனியாகிய அப் பெண்ணோ நிறைய அணிகலன்களைப் பூண்டிருந்தாள். அவ்வணிகன் அமயம் நோக்கியிருந்தான். அவளுடைய அணிகலன்களைக் கைப்பற்றிக் கொள்ள, இருவரும் ஒரு குளத்தின் கரையிலே சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது அவ் வணிகன் கூனியாகிய அப்பெண்ணைப் பிடித்துத் திடீரென்று குளத்திலே தள்ளிவிட்டு; அவளுடைய அணிகலன்களைக் கைப்பற்றிக்கொள்ளுவதற்காக அவனும் உடன் விழுந்தான்.

குளத்தில் விழ்ந்த கூனியாகிய பெண் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்னும் அவாவினால், அவ்வணிகனை இறுகப்பற்றிக்கொண்டாள். இருவரும் நீரில் மூழ்கி யெழுந்து தொல்லைப் பட்டனர். அவ்வணிகன் அக்கூனியாகிய பெண்ணின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இறுதியில் கெட்ட மனமுடைய அவ்வணிகனும் அப்பெண்ணுடன் இறந்தொழிந்தான். பிறருக்குக் கேடு நினைப்பவர்கள் தாங்களும் இவ்வாறுதான் இறந்தொழிவார்கள்.

குட்ட நீர்த்துறைப் போம்வழிக் கூனியை
ஒட்ட லன்புனல் உய்த்தவக் காகுத்தன்
திட்டை வேண்டிய தேர்ச்சியில் வாணிகன்
பட்ட தெய்துவ பற்றுளத் தார்களே.

(அ·ரை.) குட்டம்—குளம். ஒட்டலன்—பற்றுதல் இல்லாதவன். புனல்—நீர். உய்த்த—தள்ளிய. திட்டை—மேடு. பட்டது—அடைந்தது. எய்துவ—அடைவார்கள். பற்றுளத்தார்—அவாக்கொண்ட உள்ள முடையவர்.

கரு. வீண் சூழ்ச்சியால் இறந்த நரி

ஒரு நரி ஓரிடத்தில் சுற்றிக்கொண்டிருந்தது. அங்கு அதற்கு மனிதரின் குடல் இறைச்சி அகப்பட்டது. அந்த நரி அதனைத் தின்றுகொண்டிருக்கும்போது அப்பக்கத்திலே ஓர் அரசனுடைய படை வந்தது. அதனைக் கண்டதும் மனித ஊனைத் தின்று சுவை கண்ட நரிக்கு வீண் அவா உண்டாயிற்று. அஃது அப்படையைப் பார்த்ததும், ‘இங்குப் போர் நடக்கப் போகிறது. போரின் முடிவிலே நமக்கு வேண்டிய அளவு மனித ஊன் கிடைக்கும். ஆனால் நாம் இப்படியே இங்கு சுற்றிக்கொண்டிருத்தல் கூடாது. யாரேனும் நம்மைப் பார்த்தால் அடித்து விரட்டுவார்கள். ஆகையால் நாம் இறந்து போனாற்போல் இங்கோரிடத்தில் கிடந்தால் நம்மை எவரும் ஒரு பொருட்படுத்திப் பார்க்கமாட்டார்கள். போர் முடிவில் எழுந்து ஊன் தின்னலாம்’ என்று முடிவு செய்துகொண்டு அங்கோரிடத்தில் இறந்துவிட்டாற்போல் கிடந்தது.

நரியின் எண்ணப்படி அங்குப்போர் நிகழ வில்லை. படைகள் வேறிடத்திற்குச் சென்று விட்டன. நரி மட்டும் எழாமல் பிணம்போலவே கிடந்தது. அப்போது அப்பக்கத்திலே ஒரு மனிதன் சென்றான். அவன் சூழ்ச்சியாகக் கிடந்த நரியைப் பார்த்துவிட்டு,"இதோ இங்கொரு நரி இறந்து கிடக்கிறது, இதனுடைய காது வால் தோல் முதலியன எதற்கேனும் பயன்படும்" என்று எண்ணியவனாகி அந்நரியிடஞ் சென்று, அதன் காது வால் ஆகிய வைகளை அறுத்துத் தோலையும் உரித்து எடுத்து விட்டான். அதனால் வீண் சூழ்ச்சி செய்த அந்நரி இறந்துபட்டது. வீண் அவாக் கொண்டு குருட்டுத் தனமான சூழ்ச்சி செய்கிறவர்கள் இந்நரியைப் போல்தான் அழிவார்கள்.

குடற்படு முடையைக் கண்டு குறுநரி நின்று மான்தேர்க்
கடற்படை யியக்கங் கண்டே கள்ளத்தாற் கிடப்ப யாரும்
நிடற்பகை யின்மை யாலே செவிகொய்வான் வால்கொய்
[வானாய்
உடற்புறம் போர்த்த புன்தோல் உரித்திட்டங் கொருவன்
[கொன்றான்.

(அ-ரை.) குடல்படும்—குடலில் உண்டாகிய. முடை—இறைச்சி. குறுநரி—குள்ளநரி. மான்—குதிரை. இயக்கம்—தோற்றம். கள்ளம்—சூழ்ச்சி. புன்தோல்—அற்பத் தோல்.

———

கசு. அறிஞர் அடக்கம்

மங்கலம் என்னும் ஊரிலே திருச்சிற்றம்பலப் புலவர் என்னும் பெயருடைய அறிஞர் ஒருவர் இருந்தார். அவர் பல நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றறிந்தவர். கற்றறிந்தவர்கட்கு இன்றியமை யாததாகிய அடக்கம் அவரிடம் நன்கு பொருந்தி யிருந்தது. 'அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்' என்னும் முதுமொழிப் பொருளை அனைவரும் இவரிடம் நன்கு கண்டனர். இவர் சிறியோர் பெரியோர் ஆகிய அனைவரிடமும் அடக்கமாகவும் ஒடுக்கமாகவுமே பேசிப் பழகுவார். கீழ்மக்களைக் கண்டால் மிக அஞ்சியவர்போல் ஒடுங்கி ஒதுங்கிச் செல்லுவார்.

அவருடைய அடக்க வொடுக்கத்தின் உண் மையை உணராத சிலர் ஒருநாள் இவரைக் கண்டு, 'நீங்கள் கீழ்மக்களைக் கண்டால் ஏன் மிகவும் அஞ்சி நடுங்குகின்றீர்கள்? பெரியாராகிய நீங்களே கீழ் மக்களிடம் அடங்கி ஒடுங்கி நடந்தால் அக்கயவர் கட்கு இறுமாப்புத் தலைக்கேறிவிடுமே?' என்று கேட்டனர்.

அதற்கு அப்புலவர் "நான் கீழ்மக்களுக்கு அஞ்சி ஒதுங்குகின்றேன் என்று உங்கட்குக் கூறி யவர் யார்? நான் கீழ்மக்கட்கு அஞ்சி விலகவில்லை. அவர்களுடைய மேலே பட்டால் என்னுடைய தூய்மை கெட்டுவிடுமே என்றுதான் நான் ஒதுங் கிச் செல்லுகின்றேன். யானை, பன்றியைக் கண்டு

அருவருத்து ஒதுங்கிச் சென்றால் அதைக் கண்டு நாம், அச்சத்தினாலேதான் யானை ஒதுங்கிச் செல்லுகின்றதென்று கூறலாமா?" என்று கேட்டார். இவரிடம் கேள்வி கேட்டோர் புலவரின் மனப் போக்கை யறிந்து வியந்து 'அப்படியா செய்தி? நாங்கள் உங்கள் செய்கைக்குத் தவறாகப் பொருள் செய்துகொண்டோம்' என்றனர்.

பேதையரைக் கண்டால் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போதல் நெறியன்றோ? — காதுமத
மாகரத்த யானை வழிவிலகல் புன்மலத்தின்
சூகரத்துக் கஞ்சியோ சொல்.

(அ-ரை.) பேதையர் - அறிவில்லாதவர். காது - கொலைபுரிகின்ற. மா - பெரிய. கரத்த - கையினையுடைய. சூகரம் - பன்றி.

கரு. இறவாதிருந்தும் இறந்தவன்

செல்வப்பட்டி என்னும் ஊரிலே தங்கநாதன் என்று பெயருடைய ஒரு செல்வன் இருந்தான். அவனுக்குக் கணக்கிலடங்காத செல்வம் இருந்தது. ஆயினும் அவன் எவருக்கும் எவ்விதமான உதவியும் செய்ய மாட்டான். அவன் மட்டும் தினம் ஐந்தாறு வேளை உண்டிடுவான். அவனுடைய ஊரிலுள்ள மக்கள் எல்லோரும் வறியவர்களே. அவர்களுக்கு அவன் ஒரு வேளை உணவு கூடப் படைக்க மாட்டான். ஊரிலுள்ள நிலம் முழுவதும் அந்தச் செல்வனுடையதுதான். அதில் உழைப்பவர்களும் அந்த வறியவர்களே. அவர்கள் பாடுபட்டு உண்

டாக்கும் பயனையும் அவர்களுக்குத் தருந்தபடி ஊதியம் கொடாது அப்பிசினன் வாங்கிவிடுவான். அதனால் அவ்வூர் மக்கள் பட்டினியும் பசியுமாக வாழ்க்கை நடத்தினர்.

அந்த ஊரிலே காசிநாதப்புலவர் என்றொரு அறிஞர் இருந்தார். அப்பிசினனுடைய நடவடிக்கை அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'அவன் தான் நினைத்தபோதெல்லாம் உண்டி தின்றுவிட்டு மலைப் பாம்பைப்போல் விழுந்து கிடக்கிறான்' என்று பலரும் புலவரிடம் முறையிட்டனர்.

அப்புலவர் எதற்கும் அஞ்சாத கயவர் பலரைச் சேர்த்துக் கொண்டு ஒரு சூழ்ச்சி செய்தார். பிணந் தூக்கும் பாடை ஒன்றை ஏற்பாடு செய்துகொண்டு போய் அச்செல்வனுடைய வீட்டு வாசலிலே வைத்து விட்டுச் சாப்பறை மடிப்பவர்களைக் கொண்டு பறையடிக்கச் செய்தார், இதனைக் கண்ட ஊரார் என்ன செய்தி யென்று கேட்க வந்தனர். வீட்டுக்குள் கண்டபடி யுண்டி தின்றுவிட்டு விழுந்து கிடந்த செல்வனும் என்ன செய்தி யென்று ஏவலாளர்களை வினவினன். ஏவலாளர்கள் வெளியே வந்து பார்த்துவிட்டு நடப்பதைச் செல்வனுக்குத் தெரியப்படுத்தினர். இதனைக்கேட்ட தங்கநாதன் தட்டுத்தடுமாறி யெழுந்து வெளியே வந்தான்.

புலவர் அங்குக் கூடியிருந்த மக்களிடம், 'தங்கநாதன் இறந்து போய்விட்டான். பிணம் எடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்' என்று

கூறிக்கொண்டிருப்பது அவனுடைய காதுகளிலே விழுந்தன. கூடியிருந்த மக்களோ, தங்கநாதனை வெளியில் வந்து நிற்பதைக்கண்டு ஒன்றுந் தோன்றாது விழித்தனர்.

புலவர், அம்மக்களை நோக்கி, "நீங்கள் விழிப்பதின் காரணம் எனக்குத் தெரியும். அறிவுடைப் பெரியோர்கள், 'யோகி ஒருபொழுது உணவு உண்ணுவான்' என்றும், 'போகி இருபொழுது உணவு உண்ணுவான்' என்றும், 'ரோகி மூன்று பொழுது உணவு உண்ணுவான்' என்றும், 'மூன்று வேளையையுங் கடந்து நான்குபொழு துண்பவனே உடலை விட்டு இறக்கப் போகிறவனே யாவன்' என்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய தங்கநாதனே நினைத்தபோதெல்லாம் கண்டபடி யுண்ணுகின்றவனாதலின் இறந்துபோனவனோடு ஒப்பானவனே யாவான். ஆகையால்தான் யான் பாடை ஏற்பாடு செய்துகொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறினார். புலவர் கூறியவற்றை கேட்டு அங்குக் கூடியிருந்தமக்கள் அனைவரும் நகைத்தனர்.

தங்கநாதன் நாம் உயிரோடிருப்பதை இவர்களெல்லாம் வெறுக்கிறார்களல்லவா? நாம் மற்றவர்கட்கு உதவிசெய்து வாழாதபடியினாலேதான் நம்மை யெல்லோரும் இப்படி இழிவு படுத்துகின்றார்கள். நாம் இனியேனும் பலரும் போற்றும் வகையில் நடந்துகொள்ளுதல் வேண்டுமென்று துணிந்து, அன்றுமுதல் பலருக்கும் உதவி புரிதலை மேற்கொண்டதுடன் கண்டபொழுதெல்லாம்

உண்டி தின்னும் தியவழக்கத்தையும் நீக்கி ஒழுங்காக நடக்கலானான்.

ஒருபோது யோகியே ஒண்தளிர்க்கை மாதே
இருபோது போகியே என்ப — திரிபோது
ரோகியே நான்குபோ துண்பான் உடல்விட்டுப்
போகியே என்றுபுகல்.

(அ-ரை.) ஒண் தளிர்க்கை - ஒள்ளிய தளிர்போலும் கையினையுடைய. திரிபோது-மூன்றுவேளை. ரோகி-நோயாளி

கசு. அருள் அறிவாளர்க்கு அளவிலாக் கண்

ஒரு மலையிலே ஒரு முனிவர் தவஞ் செய்துகொண்டிருந்தார். அவருடைய தவத்தின் மிகுதியால் அவருக்கு அருட்கண் பார்வையுண்டாகியிருந்தது. அவர், தாம் இருந்த இடத்திலிருந்தே இவ்வுலகம் முழுவதிலும் நடக்குங் காரியங்களையெல்லாம் ஒரு சிறிதும் தவறாது கூறுவார். முக்கால உணர்ச்சியு முடைய இப்பெரியாரின் செய்கை எல்லோருக்கும் வியப்பை யளித்தது.

ஒருபோது இவரைக் கண்டு வணங்குதற்குச் சென்ற சிலர், 'பெரியீர்! தாங்கள் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் முக்கால நிகழ்ச்சிகளையும் ஒரு சிறிதும் தவறாது கூறுகின்றீர்களே தங்களுக்கு அவைகள் எவ்வாறு தெரிகின்றன?' என்று கேட்டனர். அதற்குப் பெரியார், 'யான் இறைவனுடைய அருள் அறிவுக் கண்களாலே எல்லாவற்றையும் பார்க்கின்றேன். எனக்கு அள

வில்லாத கண்கள் இருக்கின்றன' என்ருர். அதற்கு அவர்கள், 'எல்லோருக்கும் இரண்டு கண்கள் தானே இருக்கின்றன. தங்கட்கு அளவில்லாத கண்கள் இருக்கின்றனவாகக் கூறுகின்றீர்களே அஃது எவ்விதம் பொருந்தும்?' என்று கேட்டனர். அதற்கு அப்பெரியவர், 'நீங்கள் சொல்லுகிறபடி எல்லோருக்கும் கண்கள் இரண்டுதான். கல்வி கற்றவர்கட்கோ அறிவுக் கண்ணோடு கண்கள் மூன்ருகும். கைம்மாறு கருதாது கொடுக்கும் கொடையாளர்கட்கோ நகக்கண்களோடு ஏழாகும். கணக்கற்ற தவத்தைச் செய்து அதனல் அருள் அறிவு பெற்றவர்கட்கோ அளவிலாத கண்களாகும். அவ்வருளறிவுக் கண்கள் அளவில்லாதன இருத்தலான்தான், யான் உலகம் முழுவதிலும் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் இருந்த இடத்திலிருந்தே அறிகிறேன்' என்ருர் இதனைக் கேட்டோர் தவத்தினர் முக்கால உணர்ச்சியையும் எவ்வாறு பெற்ருர்கள் என்னும் ஐயம் நீங்கப் பெற்றனர்.

கண்ணிரண்டே யாவர்க்கும் கற்ருேர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி ஏழாகும் ஈவோர்க்கு—நண்ணும்
அநந்தம் தவத்தால் அருள்ஞானம் பெற்ருேர்க்(கு)
அநந்தம் விழியென் றறி.

(அ-ரை.) எண்ணும்—மதிக்கும். நண்ணும்—பொருந்தும். அநந்தம்—எல்லையில்லாத.

கஎ. ஆறும் குடிகாரரும்

ஓராற்றின் கரையில் இரண்டு புலவர்கள் நின்று உரையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஆற்றில் புதுவெள்ளம் வந்தது. அது வழியிலகப்பட்ட மலர்களை யடித்துக் கொண்டுவந்தது. அம்மலர்களிலுள்ள தேனை ஈக்களும் வண்டுகளும் மொய்த்துப் பருகிக் கொண்டிருந்தன. ஆறுகரையையும் கடந்து ஓடிக் கொண்டிருந்தது. விரைவும் மிகுதியாக இருந்தது. சிறிதும் தெளிவற்றுச் சந்தனக்குழம்பு போன்று மிருந்தது.

ஆற்றின் இக்காட்சியைக் கண்ட ஒரு புலவர் மற்றொரு புலவரை நோக்கி, 'ஆற்றின் இப்புது வெள்ளத்தை எதற்கு ஒப்பிடலா' மென்று கேட்டனர். அதற்கு மற்றைய புலவர், இவ்வாற்றினிடத்திலே குடிகாரர்கட்குள்ள தன்மைகள் முழுவதும் காணப்படுகின்றன. குடிகாரர்களின் கள் வெறியை நாடி ஈக்களும் வண்டுகளும் மொய்ப்பதைப் போல் இவ்வாற்றிடமும் அவை மொய்க்கின்றன. குடிகாரர் மதுமயக்கத்தால் நெறிகடந்து போதலைப் போல இவ்வாறும் கரைகடந்து செல்லுகின்றது. கள் வெறியால் குடிகாரர்கள் மிகுந்த ஊக்கத்தையடைந்து திரிதலைப்போல ஆறும் விரைவாகச் செல்லுகின்றது. கள்வெறியால் குடிகாரரின் உள்ளந் தெளிவில்லாமல் கலங்கிப் போயிருத்தலைப்போல இவ்வாறும் தெளிவின்றிக் கலங்கியோடுகின்றது. ஆதலின் இவ்வாற்றினைக் குடிகாரர்கட்கு ஒப்பிட்டுரைக்கலாம் என்றனர். இதனைக்

கேட்ட மற்றவர், நீவிர் கூறியது முற்றிலும் 'பொருந்தும் பொருந்தும்' என்று மகிழ்ந்து கூறினர்.

ஈக்கள் வண்டொடும் மொய்ப்ப வரம்பிகந்(து)
ஊக்க மேமிகுந் துட்டெளி வின்றியே
தேக்கெ றிந்து வருதலின் தீம்புனல்
வாக்கும் தேன்நுகர் மாக்களை மானுமே.

(அ ரை.) வரம்பிகந்து—எல்லை கடந்து. தேக்கு எறிந்து—மிகுதியாக அலைகளை வீசி. தேக்கு
எறிந்து—தேக்கமரங்களை முறித்து தீம்புனல்—இனியநீர்.

---

௧௮. மயிர் வெட்டிய அடிகள்

ஓர் ஊரிலே ஒரு துறவியிருந்தார். அவர் நல்லொழுக்கம் உடையவர். அவர் முதலில் தாடி சடை முடி முதலியன வைத்திருந்தார். பேன், புளிப்பிடித்தல் முதலியவற்றின் தொல்லை பொறுக்காமல் மயிர் முழுவதையும் மழுங்கச் சிரைத்துத் தலையை மொட்டையாகச் செய்துகொண்டு சிலகாலம் இருந்து பார்த்தார். இதுவும் அவருக்குத் தொல்லையாகவே இருந்தது. தலையில் எரிச்சல் சூடு முதலியன அடிக்கடி அவருக்குண்டாயிற்று. இதற்கு யாது செய்யலாமென்று அவர் எண்ணமிட்டார். தற்காலத்தில் எல்லோருஞ் செய்து கொள்ளுதலைப் போன்று தாமும் மயிரை மழுங்கச் சிரைக்காமலும் நீட்டாமலும் இரண்டற்கும் இடைப்பட்டதரமாய் நீள விடாது வெட்டிக்கொள்ளுதலே சிறந்ததென்று அவர் முடிவுக்கு வந்தார்.

உடனே அவர் நாவிதனைத் தேடியடைந்து அவனைப் பார்த்து 'என் தலைமயிரை வெட்டித் தற்காலம் எல்லாரும் செய்து கொள்வதைப் போலச் செய்துவிடு' என்று கூறினர். அவனும் அடிகளார் முடியை அவ்விதமே செய்துவிட்டான். அடிகள் மயிர் வெட்டிய அடிகளாக விளங்கினர்.

அடிகளின் அடியார் சிலர் அடிகளாரைக் கண்டு, 'அடிகாள்! ஏன் தாங்கள் இவ்வாறு மயிர் வெட்டிக் கொள்ளுந் தொழிலில் இறங்கிவிட்டீர் கள்? தாங்கள் இவ்வாறு செய்துகொண்டால் உலகத்தினர் பழிப்பார்களே?' என்று கேட்டனர்.

அதற்கு மயிர்வெட்டிய அடிகள், "ஒருவர் உலகத்தார் பழிக்கும்படியான தீயொழுக்கங்களை யெல்லாம் விட்டுவிட்டு நல்லொழுககத்துடன் நடந்துகொண்டால் அஃது ஒன்றே போதும். தலை மயிரை மழித்தலைப் பற்றியும் நீட்டலைப் பற்றியும் கருத்துச் செலுத்த வேண்டியதில்லை. இவ்வாறு தான் பெரியோர்களும் கூறியிருக்கிறார்கள்" என்று விடையளித்தார். இவருடைய பதிலைக் கேட்டு, 'அப்படியா?' என்று வியந்து அவருக்கு 'மயிர் வெட்டிய அடிகள்' என்று பெயரிட்டனர்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.

(அ-ரை.) மழித்தல்—தலையைமொட்டையாகச்சிரைத்தல். நீட்டல்—சடை அல்லது முடிவளர்த்தல். உலகம் பழித்தது—பெரியோர்களால் விலக்கப்பட்ட தீயொழுக்கம்.

கக இலவமலரும் தீயும்

ஒரு காட்டில் ஓர் இலவமரம் மிகவுயர்ந்து வளர்திருந்தது. இலவமரத்தின் மலர் சிவப்பு. திடீரென்று பார்த்தால் அம்மலர் தீப்போலிருக்கும். இம்மரம் முழுவதும் மலர்ந்து விளங்கிற்று. இதனை அக்காட்டிலிருந்த குரங்குகள் கண்டன. அந்தோ இம்மரத்தில் கொள்ளிக்கட்டைகள் எங்கிருந்தோ வந்து தொங்குகின்றனவே. இவைகளை இப்படியே விட்டுவிட்டால் இவை காடுமுழுமையையுஞ் சுட்டெரித்து விடுமே. இவைகளை யெப்படியாவது அவித்துக் காட்டுக்கு ஏற்படவிருக்கும் தீங்கைத் தவிர்க்க வேண்டுமென்று அவை முடிவு செய்தன. பக்கத்திலே மூங்கில் மரங்களும் மிகுதியாக வளர்ந்திருந்தன. அவற்றிலே பசிய தழைகள் அடர்த்தியாகத் தழைத்திருந்தன. குரங்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கொப்பை ஒடித்துக் கொண்டனவாய் இலவமரத்தின் மலருக்குச் சற்று தூரமாகவே நின்று கொண்டு அம்மலரையடித்துத் தாம் தீயென்று கருதிய அவற்றைத் தொலைப்பதற்கு முயன்றன. இக்காட்சி காண்போருக்கு மிகப் பேருவகையைத் தந்தது. செந்தமிழ்ப் புலவராகிய நக்கீரதேவர் இக்காட்டிற்கு வந்தபோது இக்காட்சியைத் தாம் கண்டு வியந்ததன்றி நாட்டு மக்களுக்கும் எடுத்துக்கூறி அனைவரும் மகிழுமாறு செய்தார்.

ஓங்கிப் பரந்தெழுந்த ஒள்ளிலவத் தண்போதைத்
தூங்குவதோர் கொள்ளி எனக்கடுவன்—மூங்கில்
தழையிறுத்துக் கொண்டோச்சும் ஈங்கோயே சங்கக்
குழையிறுத்த காதுடையான் குன்று.

(அ-ரை) ஒள் - ஒள்ளிய. தண்போது - குளிர்ந்தமலர். தூங்குதல்.- தொங்குதல். கடுவன்-ஆண்குரங்கு. ஓச்சும்-ஓங்கியடிக்கும். சங்கக்குழை-சங்கக்குண்டலம். இறுத்த- அணிந்த.

---

௨௦ குரங்கின் இரங்கல்

திருவீங்கோய் மலையென்பது சிவபெருமான் திருக்கோயில் கொண்டிருக்கும் ஓரழகியமலை. இம் மலையிலே பலவகையான புதுமைக் காட்சிகள் இயற்கையாகவே அமைந்து இனிமை தந்து விளங்கிக்கொண்டிருக்கும்.

ஓரிடத்தில் அழகாகக் காந்தள் மலர்ந்து விளங்கிக்கொண்டிருந்தது. காந்தளின் மலர் செந்நிறமாகத் திகழும். அக்காந்தளிடத்திலே தேன் நுகர்தற்பொருட்டு ஒரு வண்டு சென்று உட்கார்ந்தது. இவ்வாறு வண்டு காந்தள் மலரிடத்திலே சென்று உட்கார்ந்ததை அம்மலையிலே உறையும் ஒரு கிழக்குரங்கு கண்டது. அக்குரங்கு அகவை முதிர்ந்து கிழமாக மாறியிருந்தாலும் அறிவு சிறிதும் அற்றதாயிருந்தது. அது காந்தள் மலரைத் தீயென்று நினைத்துக் கொண்டிருந்தது. அதன்மேல் வண்டு சென்று உட்காரவும் அக் குரங்கிற்குப் பலவகையான எண்ணங்கள் உண்

டாய் விட்டன. அந்தோ இந்த வண்டு ஏதோ குடும்பக் கவலையால் இங்குவந்து தீயிலே பாய்ந்து தற்கொலை செய்துகொள்கிறதென்று அது எண்ணிற்று. சென்று வண்டைத் தூக்கிக் காப்பாற்றலாம் என்றாலோ குரங்குகளுக்கும் தீயினிடத்திலே மிகுந்த அச்சம் இயல்பாகவே உண்டு. ஆகவே அக் குரங்கு செய்வகை யறியாது எழுந்து வண்டைப் பார்ப்பதும் கையை நெரிப்பதும் உட்காருவதாகவும் இருந்தது. ஆறறிவுபடைத்த மக்களே இரக்கமற்ற அரக்கர்களாக இருக்கும்போது ஐயறிவுபடைத்த குரங்கு இவ்விதம் இரக்கப்படுமா என்று நீங்கள் ஐயப்படலாம். இறைவன் எழுந்தருளியுள்ள மலையின் பெருமை அது.

வழுகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிமுது மந்தி — பழகி
எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று.

(அ-ரை.) வழுகு இதழ். வழுவழுப்பான இதழ். முதுமந்தி-கிழக் குரங்கு. ஈங்கோய் - திருவீங்கோய் மலை. திங்கட் கொழுந்து - பிறைத்திங்கள். சடையான் - சிவபெருமான்.

உக. தீப்போல் விளங்கிய செவ்வல்லி

ஒரு வயலிலே மிகுதியாகச் செவ்வல்லிகள் படர்ந்திருந்தன. அவை மலரத்தொடங்கியபோது அச் செவ்வல்லியின் மலர்கள் மிகுதியாக இருந்த படியாலும் மிகச் செந்நிறமாக விளங்கியமையா னும் அவை படர்ந்திருந்த தண்ணீர் முழுவதும் தீப்பற்றிக் கொண்டாற்போலக் காணப்பட்டது.

அவ்வயலிலே நீர்வாழ் புள்ளினங்கள் பல உறைந்திருந்தன. அவை குஞ்சு முதலியனவைகளை அங்கு வைத்துக் காப்பாற்றி வந்தன. மூற்கூறிய படி மிகுதியாகச் செவ்வாம்பல் மலர்ந்தபோது அப்பேதைப் புள்ளினங்கள் திகைத்தன. "அந்தோ தண்ணீர் முழுவதும் தீப்பற்றிக்கொண்டதே! நமது குஞ்சுகட்குத் துன்பமாக முடியுமே" என் றஞ்சி அவைகள் தம்முடைய கையாகிய சிறகினுல் குஞ்சுகளை யணைத்துப் பாதுகாக்கலாயின. இவ் வாறு எல்லாப் புட்களுமே ஒலித்துத் தம்தம் குஞ்சு களைப் பாதுகாக்கத் தொடங்கினமையின் அவ் விடத்திலே மிகுந்த பேரொலியுண்டாயிற்று, இத னைக் கரையிலே சென்ற ஓரறிஞர் பார்த்து அவை கள் அவ்வாறு தம் குஞ்சுகளை அணைத்துப் பாது காக்கத் தொடங்கியமைக்குக் காரணம் யாதென்று அவர் நன்கு உணர்ந்துகொண்டு அந்நிகழ்ச்சி யைப் பலருக்குத் தெரிவித்தார்.

பகுத்தறிவற்ற பறவைகளாயினும் தம் உயிர்க் குச் சிறிதும் வருந்தாது தம் குஞ்சுகளின் உயிரைக் காப்பாற்றவே பெரிதும் கவலை கொண்டன.

இதனால் அன்றோ ஞானிகளும் மக்கள்மேற் காதலைக் கடக்க முடியாதெனக் கூறுவாராயினர். என்னே பறவைகளின் அன்பு!

அள்ளற் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினங்கள்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

(அ-ரை.) அள்ளல் - குழைசேறு. பழனம் - வயல். அரக்காம்பல் - செவ்வல்லி. வாயவிழ - மலர. வெள்ளம் - நீர். வெரீஇ - அஞ்சி. புள்ளினங்கள் - பறவைக் கூட்டங்கள். பார்ப்பு – குஞ்சு. கவ்வை - ஒலி.

உஉ. மணியொளியால் மருட்சி

ஒரு பெருங்காடு. அதில் யானைமுதல் பன்றி வரையுள்ள பல விலங்குகள் இருந்தன. பன்றிகள் சிலவகைப் புற்களின் கிழங்கைத் தோண்டி யுண்ணற்பொருட்டு ஆங்காங்குத் தம் கொம்புகளால் குழி உண்டாகும்படி பூமியின் பல விடங்களிலும் பறித்திருந்தன. பூமிக்குள் மூடுண்டிருந்த உயர்ந்த மணிக்கற்கள் பல அக் குழிகளில் வெளிப்பட்டுப் பல விடங்களிலும் தீயின் ஒளிபோலத் திகழ்ந்து கொண்டிருந்தன. அக்காலை அம் மருங்கு சுற்றிக் கொண்டுவந்த யானைக் கூட்டங்கள் முற்கூறியபடி வெளிப்பட்டு விளங்கிக்கொண்டிருந்த மணியொளியைக் கண்டு மருண்டன. யானைகட்கு இயல்பாகவே தீயென்றால் மிக அச்சம். எனவே அவைகள்

நன்கு ஆராயாது மணிகள் சுடர்விட்டுக்கொண் டிருப்பதைக் கண்டு தீ யெரிந்துகொண்டிருப்பதாக மாறுபடக் கருதி அஞ்சி ஓடத்தொடங்கின. அங்கு முல்லைகள் மிகுதியாகவுண்டு. அவைகள் மலர்ந்து விளங்கிக்கொண்டிருந்த காட்சி யானைகளின் மட மையைக் கண்டு எள்ளி நகையாடுதலைப் போன் றிருந்தது.

மற்றோரிடத்தில் முற்கூறியபடி தோன்றி வெளிப்பட்டு விளங்கிக்கொண்டிருந்த மணியொ ளியை அக்காட்டில் வாழ்ந்திருந்த வேட்டுவர்களின் சிறுவர்கள் பலர் கண்டனர். அவர்களின் கையிலே சோளக்கதிர்கள் இருந்தன. அவர்கள் அதைச் சுட்டுத் தின்பதற்குத் தீத் தேடிக்கொண்டிருந்த னர். எனவே அவர்களும் நன்கு ஆராயாது அம் மணியையே தீயென்று நினைத்துக்கொண்டு தம் முடைய கையிலேயிருந்த சோளக்கதிர்களை அந்த மணியினிடத்திலே கொண்டுபோய்ச் சுடத்தொடங் கினர். இதுவும் கண்டார்க்கு நகைப்பை விளைத் தது.

ஏனம் இளைத்த இனப்பவழ மாமணிகள்
கானல் எரிபரக்கக் கண்டஞ்சி—யானை
இனமிரிய முல்லைநகும் ஈங்கோயே நம்மேல்
வினையிரியச் செற்றுகந்தான் வெற்பு.

(அ-ரை.) ஏனம்-பன்றி. இளைத்த-தோண்டிய. இனப்பவழம்-உயர்ந்த பவழம். நகும்-நகைக்கும். இரிய-கெட. செற்று-அழித்து. உகந்தான்-மகிழ்ந்தான். வெற்பு-மலை.

ஏனம் உழுத புழுதி இனமணியைக்
கானவர்தம் மக்கள் கனல்என்னக்—கூனல்
இருக்கம் கதிர்வெதுப்பும் ஈங்கோயே நம்மேல்
மருக்கங்கள் தீர்ப்பான் மலை.

(அ-ரை.) கானவர் - வேடுவர். கூனல் - வளைந்த. இருக்கம் - சோளம். வெதுப்பும்-சுடும். மருக்கங்கள் - (பிறவித்) துன்பங்கள்.

---

௨௩. குடைக்காப்பு

வளஞ்செறிந்த ஒரு பொழிலிலே பல மரங்கள் நிறைந்திருந்தன. பலாமரங்கள் பல நன்கு காய்த்து நின்றன. பலாமரங்களிலே வேர்ப்பலா என்றொரு பலா இருக்கிறது. இது வேரிலேயும் காய்த்துப் பழுக்கும் இயல்பு பொருந்தியது. இத்தகைய பலா ஒன்று அப்பொழிலிலே வேரிற் காய்த்துப் பழுத்து வெடித்துவிட்டது. அதனால் பூமியிலும் ஒரு பிள வுண்டாகிவிட்டது. அப்பலா நன்கு தழைத்துப் பெருத்துத் தக்கபடி வளர்ந்திருந்தது. அதனுடைய வேரோ கீழ் உலகம் வரை சென்றிருந்தது. அதன் காயும் அவ்விடத்தேதான் முற்கூறியபடி பழுத்து வெடித்தது. இந்த நிலவுலகை ஆதிசேடன் என்னும் பெயரையுடைய பாம்பு தாங்கிக் கொண்டிருக்கிறதென்பது முன்னோர்களின் கொள்கை. அந்த ஆதிசேடப் பாம்பின் முடியிலே உள்ள மணியைப்பற்றியும் எல்லோருக்கும் தெரியும். முற்கூறியபடி பலாப்பழத்தால் நிலம்வெடித்த போது அம்மணியிலிருந்து ஒளி வெளிப்பட்டு நில

வுலகத்தைக் கடந்து வானுலகத்தையும் எட்டி அங்குள்ள முழுத்திங்களையும் போய்த் தொட்டது. அதனால் அத்திங்கள் குடையின் மேல்பாகத்தைப் போலவும் அக்குடையைச் சென்று தொட்ட ஒளி அக்குடையின் காம்பைப்போலவும் காணப்பட்டுக் காமவேளின் குடைக்காம்பாகக் காட்சியளித்தது. என்னே வியப்பு.

படிக்குள் ஈரப் பலாப்பழத் தொண்புவி
வெடித்த வாயில் அனந்தன் மணிவெயில்
அடுத்து வானத்(து) அமர்மதியைத் தொடாக்
கடுத்த வேள்குடைக் காம்பெனத் தோன்றுமால்.

(அ-ரை.) படி - நிலம். ஒண்புவி - ஒள்ளிய பூமி. அனந்தன் - ஆதிசேடன். மதி - திங்கள். கடுத்த - காமிகளைக் கோபிக்கும்.

---

௨௪. வண்டுந் துறவிகளும்

இரு நண்பர்கள் ஒரு மலர்ப்பொழிலைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். அங்குத் தேனுடன் மலர்ந்து பல மலர்கள் திகழ்ந்தன. பல வண்டுகள் மலருக்கு மலர் சென்று தேனைக் குடித்துவிட்டு இறுதியில் தாம் வைத்துள்ள தேனடையில் சென்று அமர்ந்தன. இதனைக் கண்ட ஒரு நண்பன் மற்றொரு நண்பனைப்பார்த்து இவ்வண்டுகளின் செயல் எப்படியிருக்கின்றதென்றான். அதற்கு மற்றவன், அறமபுரியும் இல்லறத்தார்களுடைய வீடுதோறுஞ் சென்று அவர்களிடும் உணவையுண்டு பிறகு தங்கள் தவச்சாலைக்குச்

சென்று முழுமுதற் பொருளை யெண்ணி அசைவற விற்றிருக்கும் துறவிகளைப்போல விருக்கின்ற தென்று கூறினன். இதனைக் கேட்ட முதல்நண் பன். நீ கூறியது நிரம்பவும் சரி. நானும் இக் கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் இக் கேள்வியைக் கேட்டேன் என்றான். இரு நண்பர் களும் இவ்விதம் களிப்புடன் உரையாடிக் கொண்டே சென்றனர்.

இக்காலத்துச் சில நண்பர்களிடம் இத்தகைய பேச்சுகளைக் கேட்கவும் முடியுமா? அறிவுள்ள நண்பர்களின் பேச்சன்றோ இது.

நற(வு) அவிழ்ந்த நறுமலர் தோறும்வண்(டு)
உறஅ ருந்தி இறலுற்(று) ஒடுங்குமால்
அறவர் தங்கள் அகந்தொறும் ஐயமுண்(டு)
உறவர் தங்குகை துன்னுதல் போலவே.

(அ-ரை) நறவு - தேன். உற - பொருந்த. இறல் - தேன் அடை. அறவர்-இல்லறத்தார். அகம்-மனை. உறவர்-முனிவர். துன்னுதல்-பொருந்தல்.

உரு. பலாமரமும் மயிலும்

ஒரு பலாமரம் மிகப் பருத்துத் தழைத்து வளர்ந்தோங்கி நின்றது. அம்மரத்தின் மேலே ஒழுகிய மயில் உட்கார்ந்திருந்தது. அப்பொழுது பெருங்காற்று வீசியது. அதனல் அம்மயில் அசைந்து ஆடிக்கொண்டிருந்தது. சேய்மையில் ஒரு புலவர் அதனைப் பார்த்துக்கொண்டு வந்தார்.

அவருடைய உள்ளம் கற்பனையுலகிற்குத் தாவிற்று. அந்த மயில் பலாமரத்தின் மேல்காற்றினால் அசைந்தாடிக்கொண்டிருப்பது எதைப்போல விருக்கிறதென்று எண்ணினர். பசிய தழை நெருங்கிய பலாமரம் கரிய முகிலைப்போலவும், தோகையிடமெல்லாம் அழகிய கண்கள் அமையப்பெற்ற மயில் ஆயிரங் கண்களையுடைய இந்திரன் போலவும் தோன்றின. இந்திரன் தன்னுடைய மருகனாகிய முருகனைப் பார்த்தற்குக் கருமுகிலாகிய ஊர்தியின்மேல் வந்து தனது ஊர்தியை அங்கு நிறுத்துகிறதைப் போலவும் இருக்கிறதென்று அவருக்குத் தோன்றிற்று. இதனை அவர் அறிஞர் பலரிடமும் கூறப் புலவர் கூற்றுத் தகும் தகும் என்று கூறி அவர்கள் புலவரின் அறிவு வன்மையைப் பெரிதும் கொண்டாடினர்கள்.

நெருங்கு பைந்தழை வருக்கைமேல் நெடுவளி யலைப்ப
அருங்கண் மாமயில் வீற்றிருந்(து) அசைதரும் காட்சி
கருங்க ணாயிரச் செம்மல்தன் மருகனைக் காண
மருங்கு வந்துதன் ஊர்தியை நிறுவுதல் மானும்

(அ-ரை.) பைந்தழை - பசியதழை. வருக்கை - பலா. நெடுவளி- பெருங்காற்று. மருங்கு-பக்கம். ஊர்தி-ஊர்ந்துவந்த முகில். நிறுவுதல்-நிறுத்துதல். மானும்-ஒக்கும்.

உகூ. உலகர் இயல்பு

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் பல அறிவு நூல்களையும் ஆராய்ந்தவர். அதனால் அவர் நல்லறிவும் சீரிய ஒழுக்கமும் அமையப்பெற்ற தோடு அறிஞர்கட்கு இன்றியமையாத தாகிய அடக்கத்தையும் அணிகலனாக அணிந்து நின்றார். உண்மையை உணர்ந்தோர் அவரை அடிகளென வுரைத்துப் பெரிதுங் கொண்டாடினர். அப்பெரி யார் தமது உண்மை நூலுணர்வையும் ஒழுக்கத்தை யுந்தாமே பறையறைந்து வெளிப்படுத்திக் கொள்ளாதவர். அதனால் அவருடைய பெருமை அமைதியாகப் பொருந்தி யிருந்தது. இவ்வுண்மைப் பெரியாரின் இயல்பினை இவர் வாழ்ந்திருந்த ஊரி னர் இனிதுணர்ந்து கொள்ளவில்லை.

இப்பெரியார் வாழ்ந்திருந்த ஊரிலே வேறொரு வெளிப்பகட்டுப் பேர்வழி இருந்தார். அவர் அறிவு நூல்களை ஐயந்திரிபற அறிந்தவரல்லர். ஆனால் தமக்கு எல்லாந் தெரிந்தது போல் வெளிப்பகட் டாகக் காட்டுவதிலும் ஊரினரை மருளச் செய்வதி லும் மிகவல்லவர். மக்கள் இவருடைய போலி யொழுக்கத்தினையும் பொய்க் கோலத்தினையும் மெய்யென நம்பி அவரைப் பெரிதுங் கொண்டாடி னின்றனர். இவர் இத்தகைய கபட்டுக் குணத் துடன் அனைவோரையும் ஏமாற்றி வருதலை எவரும் எளிதிலுணரவில்லை.

இவர் கூறும் அறவுரைகளும் அறிவுரைகளும் உண்மை நூல் உணராக்குறையினால் போலியாகத்தான் இருக்கும். ஆயினும் அதனை எவரும் உணர்ந்திலர். இவருடைய பெருமையே மேலோங்கி நின்றது. முற்கூறிய உண்மைப் பெரியாரை எவரும் ஒரு பொருட்படுத்திலர். இதனை அப்பெரியாரும் ஒரு பொருட்படுத்திலர். குறைகுடம் தளும்புமே யன்றி நிறைகுடம் தளும்பாதல்லவா? இவ்விதமிருக்குங்காலையில் அவ்வூருக்கு ஒரு பெரியவர் வந்தார். அவர் ஒவ்வொருவரையும் சீர்தூக்கியறியும் திறமை மிக்கவர். அவர் ஊராரின் போக்கையும் போலிப் பெரியாரின் புன்மையையும் உணர்ந்துகொண்டார். 'என்னே இவ்வூர் மக்களின் அறியாமை! குருட்டினை நீக்குங் குருவினைக்கொள்ளாது குருட்டினை நீக்காக் குருவினைக்கொண்டு குருட்டாட்ட மாடுகின்றனர். இவர்களின் போக்கு இறுதியில் குருடும் குருடும் குருட்டாட்டமாடிக் குருடும் குருடும் குழி விழுங் கதையாகத்தான் முடியப் போகிறதென்று வருந்திச் சென்றார்.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே.

(அ-ரை.) குருட்டினை - அஞ்ஞானத்தை.

உஎ. கயவர் பழிப்புக் கணக்கிற் சேராது.

ஒரு பெரியவர் அறிவிலும் அடக்கத்திலும் ஒழுக்கத்திலும் உயர்ந்தவராக விருந்தார். இவர் தம்மைக் கீழ்மக்கள் எவ்வளவு இகழ்ந்தாலும் அதனை ஒருபொருட்படுத்த மாட்டார். அறிவுடைய பெரியார்கள் ஏதேனும் இகழ்ந்து கூறினாலோ அவர்கள் அவ்விதம் கூறற்கேதுவாகிய இழி தகைமை தம்மிடம் உள்ளதா என்று ஆராய்ந்து பார்ப்பார். ஏதேனும் இருப்பின் தம்மைத் திருத்திக்கொள்வார். அப்படியேதும் இல்லாவிட்டாலோ தம்மை இகழ்ந்த அறிவுடையாரை அடுத்து அவர்கள் அவ்வாறு தம்மை இகழ்தற்குக் காரணம் யாதெனச் சொற்போர் தொடுப்பார்.

இவர் இவ்வாறு கீழோர் இகழ்ச்சியைப் பொருட்படுத்தாது மேலோர் இகழ்ச்சியை மட்டும் பெரிதாக நினைப்பதைக் கருத்தூன்றிக் கவனித்த சிலர் அப்பெரியாரை அண்மிப், 'பெரியீர்! சிறியராயினர் எவ்வளவு இகழ்ந்துரைப்பினும் தாங்கள் அதனை ஒருபொருட்படுத்துவதில்லையே. அப்படிப்பட்ட நீர் பெரியோர்கள் மட்டும் ஏதேனும் இகழ்வாகச் சொன்னால் அவர்களுடன் சொற்போருக்குக் கிளம்பிவிடுகிறீர்களே; தங்களுடைய இத்தகைய போக்கிற்குக் காரணம் யாதோ?' என்றனர்.

தம்மை அவ்விதம் கேட்டவர்களைப்பார்த்து அப் பெரியவர், 'ஒருவருடைய குற்றங் குறைகளை அளந்தறியும் ஆற்றலும் அதனைப் போற்றும் ஏற்றமும்

அறிவற்ற கீழ்மக்கட்கு ஏது? அவ்வாற்றல் அறிவுடைப் பெரியார்களிடமல்லவோ இருக்கும். ஆகையினால் தான் நான் அறிவில்லாத கீழ் மக்கள் ஏதேனும் கூறினால் அதனைப் பொருட்படுத்துவதில்லை. அறிவாளிகள் ஏதேனும் கூறின் அவற்றில் உண்மையிருப்பினும் இருத்தல் கூடும். ஆதலின் அவர்கள் கூறுவதை உடனே கவனித்து அக்குற்றங் குறைகளிருந்தால் உடனே திருத்திக்கொள்ளுகிறேன். இல்லாவிட்டாலோ அவர்கள் அவ்விதம் கூறியமைக்குக் காரணம் கேட்கிறேன்'' என்றார். பெரியாருடைய பதிலைக் கேட்டோர் அப்படியா செய்தியென்று வியந்தனர்.

அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால-நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்த நூலார்.

(அ-ரை.) அவமதிப்பு - இகழ்ச்சி. ஆன்றமதிப்பு - புகழ்ச்சி. மிகைமக்கள் - மேலோர். கைஅறியா - ஒழுக்கம் உணராத வையார் - பொருட்படுத்தார். வடித்த நூலார் - மேலார்.

உஅ. கல்வியழகே கண்ணியங்கொடுக்கும்

ஓர் ஊரில் ஒரு திருக்கோவில் இருந்தது. அக்கோவிலில் ஆண்டுதோறும் திருவிழா நடப்பது வழக்கம். ஒரு முறை அத் திருவிழா மிகப் பெரு விழாவாக இனிது நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஊரிலிருந்த ஆடவர்களும் பெண்டிரும் கணக்கின்றி

அவ்விழாவினைக் காணச்சென்றனர். ஒவ்வொரு வரும் விதம் விதமான ஆடையையும் அணிகலன் களையும் அணிந்து தம்மை அழகுபடுத்திக்கொண்டு வந்திருந்தனர். நெய்தடவிக் கூந்தலை அழகுபெற வாரி முடித்திருந்தனர் சிலர். வாசனைப் பொருள் களாகிய சந்தனம், கத்தூரி, சவ்வாது முதலியவை களைப் பூசிக்கொண்டிருந்தனர் சிலர். இவ்விதம் பல வகையாகத் தங்களை அழகு செய்துகொண்டு திருக்கோவிலில் கூடியிருந்தனர்.

மேற்கூறியவாறு கூடியுள்ள மக்களை ஒரு புலவர் கண்டார். "அந்தோ இம்மக்கள் தங்களை இவ்வாறு வெளியே பல வகையாக அழகுசெய்து கொண்டிருக்கின்றனரே! உள்ளத்தில் கல்வியழகு மட்டும் இல்லையே. இவர்களது அறியாமையை என்னென்று கூறுவது!" என்று பலவாறு எண்ண மிட்டுக் கொண்டிருந்தார்.

அப்பொழுது சிலர் இவரிடம் வந்து 'அறி வுடைப் பெரியீர்! எல்லோரும் தங்களைப் பலவகை யாக அழகு செய்துகொண்டு வந்திருக்கின்றனரே; தாங்கள் மட்டும் ஏன் இவ்வாறு எவ்வித அழகும் செய்துகொள்ளாமல் ஏழ்மைக்கோலத்தோடு இவ் வாறு இருக்கின்றீர்க'ளென்று கேட்டனர். இப் படித் தம்மை நோக்கிக் கேட்டவர்களைப் பார்த்துப் புலவர்; 'கூந்தலழகும் வேட்டியழகும் வாசனைப் பொருளழகும் ஓர் அழகாகுமா? புறத்தே இனிமை யாகக் காணப்பெறும் இப்புறவழகுகளால் யாது பயன்? ஒவ்வொருவரும் கல்விகற்றுத் தேர்தல்

வேண்டும். நன்னெறியில் நடத்தல் வேண்டும். நடுவு நிலைமை பிறழ்ந்து பேசுதல் கூடாது. நல்லொழுக்கத்தினையே மேற்கொண்டு நடத்தல் வேண்டும். இதுதான் சிறந்த அழகென்று அறிவாளிகளாற் கூறப்பெறும்' என்று அவர்கட்கு அறிவுரை கூறினர். இவ்வறிவுரையைக் கேட்டவர்கள் புற அழகின் பயனின்மையையும் கல்வியழகின் பெருமையையும் உணர்ந்து மகிழ்ந்தனர்.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.

(அ-ரை.) குஞ்சி - மயிர். தானை - குட்டை.

உக. இராகு கேதுக்களின் மருட்சி

ஒரு காலத்தில் இராகுவும் கேதுவும் ஞாயிற்றையும் திங்களையும் விழுங்குதற்குச் சென்றன. அப்போது ஒரு பெரிய நகரத்தின் வானளாவிய மாளிகையின் மேலிடத்தில் சில அழகிய மாதர்கள் உலாவிக்கொண்டிருந்தனர். அம்மாடம் மிக உயர்ந்ததாகலின் வானளாவி நின்றது. ஞாயிற்றையும் திங்களையும் பற்றி விழுங்குதற்குச் சென்ற இராகு கேதுக்கள் அம்மாளிகையின் மேலிடத்தில் உலவி நின்ற மாதரைக் கண்டன. அவர்கள் மிகுந்த அழகுடையவர்களாதலின் அவர்கள் இராகு கேதுக்களுக்கு மயில்போல் காணப்பெற்றனர். மயில் போல் காணப்பெற்ற அம்மாதரைக் கண்ட இராகு

கேதுக்கள் மிக அஞ்சித் தாம் சிறிது பற்றியிருந்த ஞாயிறு திங்களையும் விட்டுவிட்டு ஓடியொளித்துக் கொண்டன. இதனுல் ஞாயிறும் திங்களும் தமக்கு ஏற்படவிருந்த துன்பம் நீங்கி மகிழ்ச்சியடைந்தனர். இவ்வாறு இவ்வுலகிலே சில நல்லவர்களால் மற்றவர் கட்கும் நன்மையேற்படுவதைப் பார்க்கிறோம் அல்லவா!

ஒழுங்குறு சுடர்களை யுற்று விக்குற
விழுங்கறு பாப்பினம் விட்டோ ளித்திடல்
செழுங்கதிர் மாடமேற் சென்று லாமயில்
அழுங்கிய சாயலார்க் கஞ்சிப் போலுமால்.

(அ-ரை.) சுடர்கள் - ஞாயிறு திங்கள்கள். பாப்பினம்-இராகு கேதுக்கள். அழுங்கிய - வருத்திய.

௩௦. செல்வச் செருக்கு

ஓர் ஊரில் ஓர் அறிவிலி இருந்தான். முற்பிற வியில் நல்வினையால் அவனுக்கு மிகுந்த செல்வம் உண்டாயிற்று. புதுச் செல்வனுதலின் அவன் கிறுக்கு மிகுந்து செருக்கு உற்றிருந்தான். அவன் தன்னுடைய மனித இயற்கை முழுவதையுமே மாற் றிக் கொண்டான். அவன் எல்லோரிடத்திலும் கலந்து பேசமாட்டான். யார் என்ன பேசிய போதிலும் ஒன்றும் பதில்கூருமல் ஊமையைப் போல் வாயை இறுக மூடிக்கொண்டிருப்பான். ‘உன்வாயில் கொழுக்கட்டையா அடைத்திருக் கிறது, கேட்பதற்குப் பதிலே கூறமாட்டேன் என்

கிருயே?' என்றுகூடச் சிலர் கேட்டுப் பார்த்தனர். அவன் அதற்குக்கூடப் பதில் பேசவில்லே. இவ்வாறு பேசாமலிருப்பது மட்டுமன்று; ஒருவர் கூறுவதைக் காதிற்போட்டுக்கொள்ளவும் மாட்டான். ஏழை எளியவர்களேக் கண்டால் ஒரு பொருளாகக் கருதி அவர்களேக் கண்ணிஞலும் பார்க்கமாட்டான்.

பொதுவாகச் செல்வர்கள் எல்லோருமே மேற்கூறிய குணமுடையவர்களாகத்தான் இருப்பார்கள். ஆயினும் இவ்வறிவிலி புதுச் செல்வஞதலின் அவனிடம் செருக்கு மிகவும் மிகுதியாக இருந்தது. ஒரு நாள் சில பெரியோர்கள் இவ்வறிவிலியின் வீட்டிற்கு வந்து அவனுக்குப் பல நல்லுரைகள் கூறினர். ஏழை எளியவர்கட்கு அறஞ்செய்து இனியஞக இருக்கும்படி இயம்பினர். வழக்கம்போல் அம்மூழுமகன் இப்பெரியார்கள் கூறியதைக் கேளாமலும் பதில் கூருமலும் சாய்ந்தபடியே கிடந்தான். வந்த பெரியார்களில் ஒருவர் சிறிது முன்சினம் உடையவர். அம்மூழுமகனின் செயல் அவருக்குச் சீற்றத்தையுண்டாக்கியது. அவர் அம் மூழுமகன் செவிடஞகவும் குருடஞகவும் ஊமையஞகவும் ஆக வேண்டுமென்று கடுமையான சாபங்கொடுத்துச் சென்ருர். அம்மூழுமகனும் சின்ஞளில் காது செவிடுபட்டுக் கண்குருடாகி வாயும் பேசமுடியாமல் வருந்திஞன். எத்தகைய உயர்நிலே யடைந்தபோதிலும் ஒருவர் மனித இயற்கையைச் சிறிதும் மாற்றிக் கொள்ளுதல் கூடாது.

சிறியரே மதிக்கும் இந்தச் செல்வம்வந் துற்ற போதே
வறியபுன் செருக்கு மூடி வாயுளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும் பயில்தரு செவிட ராவர்
குறிபெறு கண்ணு ளாரும் குருடராய் முடிவ ரன்றே.

(அ-ரை;) மூகர் - ஊமை. செருக்கு - கர்வம். பறி - பொன்
அணி - அணிகலம்.

---

௩௧. செல்வர் வீட்டிற்குச் செல்லக்கூடாது

ஓர் ஊரில் செல்வர் ஒருவர் இருந்தார். இவர் மிகுந்த செல்வம் பெற்றிருந்தாராயினும் அதற்குத் தகுந்த குண நலத்தைப் பெற்றிருக்கவில்லை. எவரேனும் தம் வீட்டிற்கு வந்தால் இவர்கள் நம்மிடம் எதைக் கேட்டு விடுவார்களோ என்று அவர்கள் செல்லும் வரை அஞ்சிக்கொண்டே யிருப்பார்.

இவர் வறியவர்களை மட்டும்தான் கண்டு அஞ்சுவார் என்பதன்றி எவரைக் கண்டாலுமே அஞ்சுவார். தம்மைப்போன்ற பெருஞ்செல்வர் ஏதேனும் கடன் கேட்டுவிட்டால் என்செய்வதென்று ஏங்குவார். இத்தகைய இழிகுணம் இவர்பாலிருப்பினும் அது வெளிக்கு நன்றாகத் தெரியாது. வெளிப் பார்வைக்கு மிக நல்லவரைப் போலத்தான் எல்லோருக்குங் காணப்பெறுவார்.

ஒருகால் அவர் வாழ்ந்திருந்த ஊரினர் சிலர் ஒய்வுநேரத்தில் அச்செல்வரைப் பார்த்து அவருடைய நலன்களைக் கேட்டு வருவோமென்று அச் செல்வர் வீட்டை யடைந்தனர். இவ்விதஞ் சென்ற

வர்கள் அச்செல்வரோடு மிகுந்த தொடர்புடைய வர்களல்லர்; எல்லோரையும் போல ஓரளவு அறிந் திருந்தவர்களே யாவர். இவர்கள் செல்வர்கள் அல்லர். ஏழைகளுமல்லர். நடுவான நிலே யில் உள்ளவர்கள். இவர்கள் செல்வரிடத்தில் ஏதுங் கேட்கிற எண்ணத்துடன் வரவில்லே. அப் படி இருந்தும் செல்வர் தம்மைப் பார்க்கவந்தவர் களேக் கண்டு அஞ்சினர். இவர்கள் நம்மிடம் ஏதோ கேட்பதற்காகத்தான் வந்திருக்கிருர்கள் போலும் என்று எண்ணினர். ஆனல் அவர் அதனைக்காட்டிக் கொள்ளாது எங்கே வந்தீர்கள்? என்ன செய்தி? என்று கேட்டார். வந்தவர்கள், 'ஒன்றும் காரிய மில்லே. சும்மா உங்களேப் பார்த்து விட்டுப் போக லாம் என்றுதான் வந்தோம்' என்று கூறினர். ஆயினும் செல்வருக்கு அச்சம் விடவில்லே. ஏதுங் கேட்க விடாமல் விரட்டி விட வேண்டு மென்னும் எண்ணத்துடன், 'ஒன்றுங் காரியமில்லாமல் இங் கேன் வந்தீர்கள்? நீங்கள் வேலேயற்ற வீணர்களா? வீண் பொழுது போக்குவதைவிட ஏதேனும் பய னுள்ள காரியங்கள் புரியலாகாதா? உங்களேப் பார்க்கும்போதே சோம்பேறிகள் என்று எனக் குப் படுகிறது,' என்று இகழ்ச்சியாகப் பலபேச்சுக் களேப் பேசினர். இவ்விதம் அவர் பேசியதைக் கேட்டதும் அவரைப்பார்க்கவந்தவர்கள், அந்தோ, இப்பண மூட்டையின் குணமறியாமல் பார்க்க வந் தோமே என்று உள்ளம் வருந்தி விடைகூடப் பெருது திரும்பிச் சென்று விட்டனர். செல்வரும் ஏதோ கேட்கவந்தவர்களே நல்ல சூழ்ச்சி செய்து

விரட்டி விட்டோம் என்று மகிழ்ச்சியுடன் இருந்தார். ஒன்றும் விரும்பா விட்டாலும் செல்வர்கள் இடத்திற்குச் சென்றால் இத்தகைய இழிவுதான் ஏற்படு மென்பதை உலகத்தில் இன்றும் கண் கூடாகக் காணலாம்.

> ஒன்றும் வேண்டல ராயினும் செல்வர்பால் உறுமிடி
> [யவர்சார்ந்தால்
> இன்று வந்தமை யாதினைக் கருதிமற் றிவரென
> [வுளத்(து)எண்ணிக்
> கன்று மாறுபல் குறிப்புரை நவிற்றுவர்; காதலின்
> [அவர்பால்போய்
> மன்ற வந்தது சிறுமையே இவர்க்கன்றி மற்றிலை
> [யறிபாவாய்.

(அ-ரை.) மிடியவர் - வறியவர். கன்றுமாறு - மனம் வருந்தும்படி, நவிற்றுவர் - கூறுவர். மன்ற - ஐயமின்றி.

கஉ. குரங்குகள் பந்தாடல்

ஓர் அரசனுடைய அந்தப்புரத்திலே அழகிய சோலை யொன்றிருந்தது. அந்தச் சோலையிலே மா, பலா, வாழை முதலிய இனிய கனிமரங்கள் பல இருந்தன. அரசனுடைய மனைவி தன்னுடைய தோழிகளுடனே அப்பொழிலில்தான் அடிக்கடி பந்து விளையாடுவாள். அந்தச் சோலையிலே குரங்குகள் மிகுதியாக விருந்தன. குரங்குகளின் இயற்கைதான் அனைவருக்குந் தெரியுமே. மனிதர்கள் செய்வதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அவைகளும் அவ்வாறே செய்யத் தொடங்குமல்லவா? அரசனுடைய மனைவியும் தோழியும்

பந்தாடுதலைப் பார்த்திருந்த குரங்குக் கூட்டங்கள் தாமும் அவ்வாறே பந்தாடுதலுக்கு எண்ணின. அவைகளுக்குப் பந்துகள் வேண்டுமே, என் செய்வது?

குரங்குகள் பந்துகளுக்காக முயற்சி செய்ய வில்லை. அந்தச் சோலையிலே மாமரங்கள் மிகுதியாகக் காய்த்துப் பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்தன. குரங்குகள் அக்கனிகளில் ஒவ்வொன்றைப் பறித்துக்கொண்டு அரசன்மனைவியும் தோழியரும் எவ்வாறு பந்தாடுவார்களோ அவ்வாறே தாமும் விளையாடலாயின. அரசன் மனைவியும் தோழியரும் குரங்குகளின் இப்பந்தாடலைக் கண்டு விழுந்து விழுந்து நகைத்தனர்.

மனிதனே குரங்கிலிருந்துதான் உண்டானன் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள் அன்றோ! ஆகவே மனிதர்கள் செய்வதைப் பார்த்துக் குரங்குகளும் அவ்வாறு செய்வதில் என்ன புதுமையிருக்கிறது?

இந்திர திருவன் என்ன ஈங்குநிற் கின்ற வள்ளல்
பந்தியின் மடநல் லார்பொன் பந்தெறிந்(து) ஆடல் நோக்கி
நந்திய பொழிலில் தேமா நறுங்கனி பறித்துக் கொண்டு
மந்தியும் ஆடல் செய்யும் மகதநா(டு) ஆளும் மன்னன்.

(அ-ரை.) இந்திர திருவன் - இந்திரனைப் போன்ற செல்வத்தையுடையவன். பந்தி - வரிசை. நந்திய - செழுமையாகவுள்ள. பொழில் - சோலை. தேமா - இனிக்கின்றமா. மந்தி - பெண்குரங்கு.

---

௬௬. திங்களின் மறு

ஒரு சிறுவன் தன்னுடைய தந்தையைப் பார்த்துத், 'திங்களில் ஒரு மறுத்தெரிகிறதே! அஃது யாது? ஏன் அவ்வாறுண்டாயிற்று?' என்று கேட்டான். அச் சிறுவனுடைய தந்தை நல்ல அறிவாளி. திங்களின்கண் உள்ள மறுவின் உண்மையை அவர் ஐயமற அறியார். ஆயினும் ஒருவாறு பதில்சொல்லித் தம்முடைய சிறுவனை மகிழ்விக்க எண்ணினர்.

அவர் சிறுவனைப்பார்த்து; 'இந்நிலவுலகிலே வாழும் மாதர்களில் மிகுந்த பேரழகு வாய்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். இயற்கையாகத் திங்கள் அவர்களுடைய முகங்கட்கு ஒப்புக் கூறப்படுவது வழக்கம். அவ்விதமாக ஒரு நகரத்தில் வாழ்ந்த பெண்களின் முகம் திங்களைப் பார்க்கினும் மிகப் பேரழகோடு விளங்கிற்று. திங்களுக்கு அவர்களுடைய அழகிய முகத்தின் முன்னர் நிற்கமுடியவில்லை. திங்கள் தோல்வியடைந்து ஓடலாயிற்று. அப்போது சிலர் அத்திங்களைப் பிடித்து அது தோற்றதற்கு அடையாளமாக அதற்கு மையைத் தீட்டி விட்டார்கள். அந்த மையைத்தான் உலகத்தார்கள் திங்களில் உள்ள மறு என்று கூறுகின்றார்கள்' என்று விடையிறுத்தார். சிறுவன் தந்தையினுடைய விடையைக் கேட்டு உண்மையெனவெண்ணி மகிழ்ச்சியடைந்தான்.

வண்டிமிர் குழலினர் வதனப் பேரெழிற் (கு)
எண்டகு முழுமதி யெதிரற் றேகுதல்
கண்டுமை தீட்(டு)அறி குறியைக் காசினி
மண்டிய களக்கென மயங்கி யோதுமால்.

(அ-ரை.) இமிர் - ஒலிக்கும். வதனம் - முகம் எழில்-அழகு. என்தகும் - மதிக்கத் தகுந்த. முழுமதி - நிறைத்திங்கள். காசினி - உலகம். மண்டிய-மிகுந்த.

---

௩௪. இரவலர் தமரினும் இனியர்

செல்வபுரி என்னும் ஊரிலே தருமவேள் என்னும் பெயருடைய ஒரு செல்வனிருந்தான். அவனுக்குக் கணக்கிலடங்காத செல்வம் இருந்தது. அவன் அச் செல்வத்தை எல்லோருக்கும் அளித்து மகிழ்ந்தான். அவனுக்குக் கணக்கற்ற சுற்றத்தினர் இருந்தனர். அவர்களில் பெரும்பாலார் வறியவர்கள். அவர்களுக்கும் தருமவேள் தான் உதவி புரிந்து காப்பாற்றி வந்தான்.

காலப்போக்கிலே தருமவேளுடைய செல்வம் குறைந்துகொண்டே வந்தது. அதனால் அவன் எல்லோரையும் காப்பாற்றுதல் இயலாததாக ஆகிவிட்டது. ஆகவே அவன் தன்னுடைய உறவினர்கட்கு மிகுதியாக உதவிபுரிவதைக் குறைத்துவிட்டுச் சேய்மையிலிருந்து தன்னை நாடி வரும் இரவலர்கட்கும் உறுப்புக் குறைவுடையவர்கட்குமே மிகுதியாக உதவி புரியலானான்.

சிலர் தருமவேளிடஞ் சென்று "நீ உன்னுடைய உறவினர்களை நன்கு காப்பாற்ருமல் எங்கெங்கோ இருந்து வரும் இரவலர்களையே பெரிதாக மதித்து அவர்களையே போற்றுகின்ருயே; இது தகுமா? நீ செய்வது, "தன்னைப் பெற்றதாய் கிண்ணிப் பிச்சையெடுக்கிருள்" தம்பி கும்பகோணத்திலே கோதானம் செய்கிருன்; என்பதையல்லவா ஒத்திருக்கிறது?" என்ருர்கள். அதற்குத் தருமவேள், 'எல்லோருக்கும் உதவி புரிய வேண்டியது கடமைதான். ஆயினும் சுற்றத்தாரல்லாத இரவலர்களே நமக்கு மிகுதியும் வேண்டியவர்கள். எதனுலெனின், நாம் இம்மையில் கொடுக்கும் பொருளை நல்வினையின் வழியாக மறுமையிற் கொடுக்கும் பண்பு இரவலர்களிடத்திலேதான் அமைந்திருக்கிற' தென்று இயம்பினுன். இவனிடம் பேச்சுக்கொடுத்தவர்கள் இவன் கூறுவது உண்மைதான் என்று கூறிச் சென்றனர்.

உரவுநீர்க் கருங்கடல் உடுத்த மாநிலத்(து)
அருளுடன் இம்மையில் அளித்த வான்பொருள்
மருவிய மறுமையில் வழங்கு பான்மைபால்
இரவலர் தமரினும் இனியர் ஆவரே.

(அ-ரை.) உரவு-ஒலிக்கின்ற. இம்மை-இப் பிறப்பு. வான்பொருள்-சிறந்தபொருள். மருவிய-பொருந்திய. மறுமை-மறுபிறப்பு. பான்மை-தன்மை. இரவலர்-இரப்போர். தமர்-தம்மவராகிய சுற்றத்தார்.

---

௫௫. ஆம்பல் வண்டு

இளவேனிற் காலத்து உவாநாளின் மாலைப் பொழுது ஒன்றில் இரண்டு அறிஞர்கள் ஒரு பொய்கைக்கரையிலே உலாவிக்கொண்டு வந்தனர். அப்போது முழுத்திங்கள் எழுந்தது. எங்கும் பரவி யிருந்த மாலைக்காலவிருள் மறைந்தது. ஆம்பல்கள் கட்டவிழ்ந்து மலர்ந்தன. அம்மலர்களிடத்திலே தேனுண்டற்கு வண்டுகள் ரீங்காரஞ் செய்து கொண்டு சென்றன. அப்போது ஓர் அறிஞர் மற்றோர் அறிஞரைப் பார்த்து, "இவ்வண்டுகள் ஆம்பலிடத்திற்குச் சென்று பாடுதல் எவ்வாறிருக் கின்ற" தென்றார்.

மற்றவர் சிறிது சிந்தித்துக், 'களிப்பிணையுடைய இக் கருவண்டுகள் ஆம்பல்மலரைச் சேர்ந்து இசை பாடுங்காட்சி, விளக்கமான வெள்ளிய திங்கள் துரத்துதலும், அத்திங்களின் துரத்துதலுக்கஞ்சிய காரிருள் வண்டுகளின் வடிவமெடுத்துக்கொண்டு அத்திங்களின் தலைவியாகிய ஆம்பல் மலரை யடைந்து தமது குறையைக் கூறி இரங்கியழுகின் றாற்போல இருக்கின்ற' தென்று கூறினர். இத னைக்கேட்ட முதற் புலவர், 'நீவிர் கூறியது பொருந் தும் பொருந்தும்' என்று மற்றவர் கூறியதை மிகவும் வியந்து புகழ்ந்தார்.

களிகொள் வண்டினம் ஆம்பல்சேர்ந்(து) இசைபயில் காட்சி
ஒளிரும் வெண்மதி கரத்தலும் உடைந்தகார் இருள்போய்
அளியின் மெல்லுரு எடுத்தவன் அருந்துணை வியர்பால்
எளிமை இன்னுரை இரங்கிவீழ்ந்(து) இசைப்பன இயையும்.

(அ-ரை.) ஒளிரும் - விளங்குகின்ற. அளி - வண்டு. (ஆம்பல் திங்களைக் கண்டு மலர்ந்து சிறப்படைதலால் ஆம்பலுக்குத் தலைவன் திங்கள் என்பது நூலோர் கூற்று.)

---

௩௯. யானைகளின் மருட்சி

ஒரு பெரிய நகரத்தைச் சூழ்ந்து ஆழ்ந்த பெரிய அகழியொன்றிருந்தது. அதில் பல யானைகள் விழுந்து கலக்கிப் பலவிதமாக விளையாடின. யானைகளுக்குத் தண்ணீரைக் கண்டுவிட்டால் மிகுந்த களிப்புண்டாகிவிடுவது இயற்கை. இங்குக் கூறப்பெற்ற யானைகள் விளையாடிய அகழி மிகுந்த ஆழமுடையது. பாதாளம் வரையிலும் செல்வது.

இவ்வகழியில் விளையாடிய யானைகள் பாதாளத்திலிருந்துகொண்டு இந்நிலவுலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேடன் என்னும் பாம்பைக் கண்டன. ஆனால் ஆதிசேடன் என்னும் பாம்பு என்று யானைகளுக்குத் தெரியாது. அவ்வகழியிலுள்ள தாமரையின் கொடி என்று அவை எண்ணின. ஆகவே அவ்வாதிசேடனைத் துதிக்கையால் இழுத்து அருகாகப் பார்த்தன. ஆதிசேடனது உச்சிக் கொண்டையில் உள்ள நாகமணி நன்கு தெரிந்தது. அவ்வாறு தெரிந்தும்கூடத்

தாங்கள் துதிக்கையால் இழுத்தது ஆதிசேடன் என்று உணராமல் இது ஒரு கொள்ளிக்கட்டை யாகுமென மாறுபாடாக எண்ணி அதனை எறிந்து விட்டன. இவ்வாறு ஆதிசேடன் வரையில் சென் றிருந்த அவ்வகழி எவ்வளவு ஆழமிருந்திருக்க வேண்டுமென்பதைக் கூறவும் வேண்டுமோ?

கண்அ கன்றபே ரகழியில் உழக்கிய கரிகள்
தண்ணந் தாமரைத் தாளெனத் தடக்கையால் பிலத்தில்
நண்ணுஞ் சேடனை யெடுத்(து)அதன் சுடிகையில் நாறி
உள்நி வந்தொளிர் மணியினல் உற்கையென் றெறியும்.

(அ-ரை) கண் - இடம். உழக்கிய - கலக்கிய. தண் - குளிர்ச்சி பொருந்திய. அம் - அழகிய. தடக்கை - பெரியகை. நண்ணும் - பொருந்தும். சுடிகை - உச்சிக் கொண்டை. நிவந்து - உயர்ந்து. ஒளிர் - பிரகாசிக்கிற. உற்கை-கொள்ளிக் கட்டை.

௩எ. இறைவனைப்போன்ற இல்லம்

ஒரு நகரத்தின் தெருவில் ஓர் அழகிய வீடி ருந்தது. அது மிக வுயர்ந்து வானளாவி நின்றது. அதன் கழுத்தில் கருமுகில் படிந்து நின்றது. பால் போலும் ஒளியை வெளிப்படுத்துகிற குழவித் திங்கள் அவ்வீட்டின் முடியின் தவழ்ந்து சென்றது. இந்நிலையில் அவ்வீடு பார்ப்பவர்கட்கு இறைவனைப் போலக் காணப்பட்டது. எவ்வாறெனின்; சிவ பிரானர் ஆகிய இறைவர் தம் உடல் முழுதும் வெள்ளிய நீற்றைப் பூசியுள்ளார். இது அவ்வீட்டின் வெள்ளிய சுண்ணப் பூச்சுக்கு இணையாகும்.

கடவுள் தம் கண்டத்தில் பாற்கடலில் தோன்றிய நஞ்சினை நிறுத்தியுள்ளார். இது அவ்வீட்டின் கழுத்திடத்தில் கருமுகில்கள் படிந்திருந்ததற்கு இணையாகும். சிவன் தம்முடியில் பிறைக் கொழுந்தினையணிந்துள்ளது, வீட்டின் முடியில் பிறைத்திங்கள் தவழ்தலுக்கு இணையாம்.

மிகவுயர்ந்து நின்ற ஒரு வீட்டின் இடத்தில் இவ்விதம் இறைவனுடைய தன்மையையும் நம் நாட்டுக் கவிஞர்கள் கண்டுபிடித்துப் பாராட்டியது நம்போன்றார்க்கு ஒப்பற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றதன்றோ? நாமும் இவ்வாறே ஒவ்வொரு பொருளையும் நன்கு ஆராய்ந்து அதன் அதன் இடத்தில் எத்தகைய சிறப்புள்ளனவென்பதைக் கண்டு மகிழ்தல் வேண்டும்.

வடிகொள் வெண்சுதை தீற்றிய மாடநீள் கழுத்தில்
படிய மைம்முகில், கதிர்விடு பால்நிலாக் குழவி
முடியின் மீதுறத் தவழ்தலான் முழுமையும் வெள்ளைப்
பொடிய ணிந்தருள் கறைமிடற் றண்ணலைப் பொருவும்.

(அ-ரை) வடிகொள் - வடித்தலைக் கொண்ட. வெண்சுதை - சுண்ணச் சாந்து. தீற்றிய - பூசிய. மைம்முகில் - கருமுகில். நிலாக்குழவி - பிறைத்திங்கள். பொடி - வெண்ணீறு. மிடறு - கண்டம். அண்ணல் - சிவன். பொருவும் - ஒக்கும்.

Publication No. 417

ILAKKIYA CHIRU KATHAIGAL

PART I

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
- PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD. -
TINNEVELLY & MADRAS.

S. B. PRESS. CHOOLAI. MADRAS.

Price As. 8.